476

THE VAIDYA KALANIDHI

Book 8 No. 1

Jan. - Feb. 1921

JL
LBm21, N14VK.
N21.8.1.
145255.

**22 Gold Medals Awarded!!!**

# S. VAIDYA & Co.,

**MADRAS AND TRICHINOPOLY.**

## ஜின்டான்

### ஜகப்பிரசித்திபெற்ற ஜின்டான் மாத்திரை.

வெகு மேலான சுகந்த மாத்திரை.




சதா கைவசமிருந்தால் ஸகல உத்ஸாகத்துக்கும், தைரியத்துக்கும் எல்லா, வியாதி நிவர்த்திக்கும், சுருசுருப்புக்கும், விவேகத்துக்கும் காரணமாகிறது. இதின் உண்மை வாங்கி அநுபவித்தவர்கள்தான் அறிவார்கள். பெரிய பெரிய டாக்டர்கள் இதன் பெருமையைப் புகழ்வதின் காரணம் தெளிவாகிறது.

கையால் பிடுங்கிப்போடுவதை கோடாறிகொண்டு வெட்டுவார்கள் அதுபோல் சுலபத்தில் கைவசம் வைத்து ஆரம்பத்திலேயே அடியோடே நிவர்த்திக்கும் ஜின்டானின் பெருமைதெரியாமல் வியாதியை முதிரவிட்டு சிரமப்படுபவருக்கு கர்மபலனே காரணம், இதுதான்.

## உண்மை. !!!

எல்லாக்கடைகளிலும் கேழ்க்கப் பெறலாம்: 260 மாத்திரைகளடங்கிய அழகான பொட்டளம் விலை ரூ. 1. இதில் கண்ணாடி வைத்த அழகிய டப்பி இனாமாக வைத்திருக்கிறது. 55 மாத்திரையும் சாதா டப்பியுடன் 4. அணா. 15 மாத்திரை அடங்கிய பொட்டளம் 1. அணா.

ஹோல் ஏஜண்டுகள்:—

**எஸ். வைத்யா அண்டு கோ.,**

பார்க்டவுன், மதராஸ்.

பிராஞ்சிகள்:—

2, கொண்டி செட்டித்தெருவு, எஸ்பிளனேட், மதராஸ்.

சைனாபஜார் தெரு, திருச்சி கோட்டை.

N. B.—இவர்களிடம் ஸகல சுதேசி சாமான்களும், செண்டுகளும், குடும்ப மருந்துகளும், பிஸ்கட்களும், கூந்தல் தைலம், பல்பொடி மேலானது, பித்தளை மெழுகுவத்தி ஸ்டாண்டுகள், இங்கோ-எஸ்லென்ஸ் என்னும் குறுக்கின ஸத்துமசி-இத்துடன் 12 மடங்கு ஜலம் சேர்க்க மேலான மசி, ஸ்டீல் பேனா, பௌண்டென் பேனாக்களுக்கும் உபயோகமாகிறது. வேண்டியவற்றிற்கு எழுதினால் விவரம் அனுப்பப்படும்.

---

விளம்பரக்காரருக்குக் கடிதம் எழுதுகையில் தயவுசெய்து வைத்தியகலாநிதியைக் குறிப்பிடுங்கள்

குறிப்பு:—1920ஞு ஆகஸ்டுமீ 1-உ முதல் விலை வாசிகளின் மாறுதல்

## ஜண்டு ஔஷத சாலை

### லிமிடெட்.

நூதன முறையில் முற்றிலும் நாணயமானவகையில் எல்லாவிதத்தில் பிரயோஜனப் படக்கூடிய சாஸ்த்ரீய ஆயுர்வேத ஔஷதங்களை ஷை ஔஷதசாலையார் விமர்சையாகத் தயார் செய்கிருர்கள். இவர்கள் எல்லா இந்திய ஆயுர்வேதக் காட்சிச் சாலைகளிலிருந்து தங்கமெடல்களைப் பரிசுபெற்றவர்கள்.

மேற்கண்ட விலாஸத்துக்கு எழுதினுல் காட்லாக் அனுப்பப்படும்.

**The Zandu Pharmaceutical Works, Ltd.,**

**14, Elphinstone Road, BOMBAY.**

## மணித்தைலம்

பரிமள மிகுந்த வாசனைத்தைலம், சாஸ்திர முறைப்படி காய்ச்சின தைலமானையால் உபயோகிக்கிறவர்களுக்கெல்லாம் அற்புதமான குணத்தைக் கொடுக்கிறது. சொற்பகாலமாய் வெளிவந்துலாவும் தைலத்தைப்போல் கருகிவிடக்கூடாது. மணித்தைலம் 35வருஷமாய் விற்பனையாகி வருகிறது. தலைமயிரை உதிராமற்றடுப்பதன்றி மிருதுவாயும் கறுப்பாயும் வளரச்செய்யும். மூளையை குளிரச் செய்கிறது. ஒரு புட்டியின் விலை ரூ. 1.

**வைத்திய சாஸ்திரி மணிசங்கர் கோவிந்தஜி ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,**

26, பிராட்வே, மதராஸ்.



## "வைசிய மித்திரன்."

இது காரைக்குடியினின்றும் வாரந்தோறும் அருமையான விஷயங்களுடன் ராயல் சைஸில் வெளிவரும் ஒரு வாராந்தத் தமிழ்ப் பத்திரிகையாகும். இது வியாபார விருத்திக்குரிய விஷயங்கள், கைத்தொழிற் குறிப்பு, விவசாய நுட்பம், விநோதக் குறிப்பு, அந்நிய வர்த்தமானம், பொது வர்த்தமானம், இராஜாங்க சமாச்சாரம், ஆகிய இவ்விஷயங்களுடன் வெளிவருகிறது. இந்திய மக்களுக்குப் "புதிய ஊக்கமும், செல்வப் பெருக்கமும் வளருமாறு, பற்பல ஆராய்ச்சி வியாசங்கள், ராஜதந்திர நுட்பங்கள்" இவற்றை வெகு அழகாக எடுத்துப் போதித்து வருகின்ற இப்பத்திரிகையானது ஒவ்வொரு தமிழராலும் படிக்கத்தக்கதெனப் பல பத்திரிகைகளாலும் புகழப்படுகின்றது. ஒவ்வொரு தமிழபிமானியாகிய இந்தியரும் இதைப் படித்தின்புறவேண்டிய தவசியம். இந்தியாவுக்கு வருட சந்தா ரூபாய் 5—0—0 (ரூபாய் ஐந்தே) வெளி நாடுகளுக்கு ரூபாய் 6—0—0.

மானேஜர்,
"வைசிய மித்திரன்"
காரைக்குடி.

தயவுசெய்து இதை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

பல கண்காட்சிகளில் மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

### பி. சுப்பருயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

ஸஞ்சீவி மாத்திரைகள்:—இம்மாத்திரைகளினுல் தலைவலி, தலைபாரம், சளி, இருமல், சுரம், மயக்கம், வாந்தி, விஷசுரம், இசிவு, வயிற்றுப்பிசம், வயிற்றுவலி, தெற்குத்திக்கனை முதலிய நோய்கள், தீரும். அறைக்குழந்தைகள் முதல் யாவரும் உபயோகிக்கலாம். விலை புட்டி 1-க்கு அணா 10. இந்தியாவிலும் பர்மாவிலும் 1-முதல் 6-சீசாக்கள் வரையில் அனுப்ப வி. பி. முதலிய சிலவுகள் அணா 7 பிரத்தியேகம்.

தஞ்சாவூர் மசாலாபவுடர்:—ஸ்தாவர வர்க்கத்தை சேர்ந்த வாசனை வஸ்துக்களைக்கொண்டு செய்யப்பட்ட மனோரம்மியமான கலவை பவுடர். சைவாளும் மாம்ஸதாரிகளும் குழம்பு, கறி, துவையல் முதலிய இன்னும் எல்லாவித சமையல் பதார்த்தங்களில் உபயோகித்தால் அவைகளின் ருசி மனதை கவரச்செய்யும். இதை உபயோகித்தால் நீடித்த அக்கினிமாந்தம், அருசி முதலியது குணப்பட்டு சாப்பாடு உட்கொள்ள ஆவலை உண்டாக்கும். இம்மசாலாவை சேர்த்துசெய்த சமையலின் மனோரமியமான வாசனை வீடுமுழுவதும் மட்டுமல்ல, வெளியில் சுற்றுப் பக்கங்களிலும் பரவும். இதை பிராமணர்களும் மற்றவர்களும் யாதொரு தடையுமில்லாமலும் தங்கள் தங்கள் ஆசாரத்திற்கு ஹானியில்லாமலும் நிஸ்ஸந்தேகமாய் உபயோகிக்கலாம்.

டப்பா 1-க்கு விலை அணா 8. 1 அல்லது 2 டப்பாக்கள் அனுப்ப வி. பி. சிலவு அணா 7. பிரத்தியேகம்.

**பி. சுப்பராய், ஆயுர்வேத ஔஷதசாலை,**

**ஸ்ரீ வெங்கடேசபெருமாள் கோவில் சன்னதி, தஞ்சாவூர்.**

# அஷ்டாங்க ஹ்ருதயம்

## இரண்டாம் பாகம்.

### சிகித்ஸா-கல்ப ஸ்த்தாநங்கள் அடங்கியது.

ஆயுர்வேத பூஷணம் பண்டித எம். துரைஸ்வாமி அயங்கார்அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.

சிகித்ஸா ஸ்த்தாநத்தில் :—ஜ்வரசிகித்ஸை, இரக்த-பித்த சிகித்ஸை, காஸ சிகித்ஸை, ச்வாஸ சிகித்ஸை, இராஜயக்ஷ்ம (க்ஷய) சிகித்ஸை, சர்தி (வாந்தி) இருதயரோக சிகித்ஸைகள், மூல (அர்சஸ்) சிகித்ஸை, அதிஸார சிகித்ஸை, கிரஹணீ சிகித்ஸை, மூத்திராகாத சிகித்ஸை, பிரமேஹ சிகித்ஸை, வித்ரதி சிகித்ஸை, அண்டவ்ருத்தி சிகித்ஸை, குல்ம சிகித்ஸை, மஹோதரம் முதலிய உதர ரோகங்களின் சிகித்ஸைகள், பாண்டுரோக சிகித்ஸை, ச்வயது (சோதை) சிகித்ஸை, குஷ்டரோகம் முதலிய சர்ம வியாதிகளின் சிகித்ஸைகள், வாத ரோகங்களின் சிகித்ஸை, இவை முதலிய அநேகம் வியாதிகளின் சிகித்ஸா விஷயங்கள் 22-அத்தியாயங்களில் விஸ்தாரமாக விவரிக்கப்படுகின்றன.

கல்ப ஸ்த்தாநத்தில்:—வமந கல்பம், விரேசந கல்பம், வமந-விரேசநங்களாலுண்டாகும் தீங்குகளைப் பரிஹரிக்கும் கல்பம், வஸ்தி கல்பம், வஸ்திப் பிரயோகத்தாலான வியாபத் பரிஹார கல்பம், பேஷஜ கல்பம் இவை முதலிய ஸித்தௌஷத சிகித்ஸா முறைகள் 6-அத்தியாயங்களில் விவரிக்கப்படுகின்றன.

ஆக இந்த இரண்டாம் 28 பாகத்தில் அத்தியாயங்கள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு பக்கத்திலும் வியாக்யானமும், விஸ்தாரமான விஷய அகராதியும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வைத்திய கலாநிதியின் அளவில் 250 பக்கங்களுக்கு மேல் கொண்டது.

விலை ரூ. 3-12-0.

வைத்திய கலாநிதி ஆபீஸ், வேப்பேரி, மதராஸ்.



## SUN SAOP HAIR DESTROYER

இதை ஒரு தடவை போட்டால் தேகத்தில் எந்த இடத்திலிருந்தாலும் மயிரை சுத்தமாய் எடுத்துவிடும் வலியுமில்லை. கறை படுவதுமில்லை. இந்த ஒரு ஸோப்புத்தான் தோலின் வர்ணத்தைபளபளப்பாய் வைக்கிறது. மூன்று கட்டிகளுள்ளபெட்டி 1-க்கு ரூ .1-4-0. வி. பி. சார்ஜ் 4 அணா.

தனி ஏஜெண்டு:—மேட்டா புருஷோத்தம் முல்ஜி,

வாஸனைகள், மருந்துகள், பித்தளை காண்டில் ஸ்டாண்ட் வ்யாபாரம்,

29, சைனாபஜார்ரோட், பூக்கடை பக்கம், மதராஸ்.

**Metha Purushottam Moolji,**

*Perfumer, Druggist, & Brass Candle Stand Manufacturer, 29, China Bazaar Road,*

*Near Flower Bazaar, Madras.*





# அஷ்டாங்க ஹ்ருதயம்.

## முதற் பாகம்.

### ஸூத்திர-சாரீர-நிதாந ஸ்த்தாநங்கள் அடங்கியது.

ஆயுர்வேத பூஷணம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது,

ஸூத்திர ஸ்த்தாநத்தில்:—ஆயுஷ்காமீயம், தினசர்யை, ருதுசர்யை, ரோகங்கள் உண்டாகாத வழி, திரவத்திரவ்ய விஞ்ஞாநம், அந்நஸ்வரூப விஞ்ஞாநம், அந்நரக்ஷை, தோஷாதி விஞ்ஞாநம், சோதநாதி குணமுள்ள திரவ்ய ஸ்வரூப விவரணம், ஸ்நேஹம், ஸ்வேதம், வமந-விரேசநம், வஸ்தி, நஸ்யம், தூமபாநம், கண்டூஷாதிகள், அஞ்ஜநாதிகள், தர்ப்பண-புடபாகங்கள், யந்திரவிதி, சஸ்திரவிதி, ஸிராவ்யதை, சஸ்திர கர்மம், க்ஷாராக்னி விதிகள் முதலிய அநேகம் விஷயங்கள் 30-அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

சாரீர ஸ்த்தாநத்தில்:—கர்ப்போற்பத்தி, கர்ப்ப வியாபத், அவயவாதிகளின் தத்துவங்கள், மர்ம விவரணம், விக்ருத சாரீர விஞ்ஞாநம், தூதபரீக்ஷை முதலிய சரீர தத்துவாதி ஸம்பந்தமான விஷயங்கள் ஆக இவை முதலியவை 6-அத்தியாயங்களில் விவரிக்கப்படுகின்றன.

நிதாந ஸ்த்தாநத்தில்:—ஜ்வரம், இரக்த பித்தம், காஸம், ச்வாஸம், ஹிக்கா (விக்கல்), க்ஷயம், மதமென்னும் வெறி, அர்சஸ் என்னும் மூலம், அதிஸாரம், கிரஹணீ, மூத்திர க்ருச்சிர மென்னும் நீர்ச்சுருக்கு முதலியவை, பிரமேஹம், வித்ரதி, அண்ட வ்ருத்தி, குல்மம், மஹோதரம் முதலிய உதரத்தைப்பற்றிய வியாதிகள், பாண்டு, சோகை, குஷ்டம், ச்வித்ர மென்னும் வெண்குஷ்டம், வாதரோகங்கள் முதலிய ரோகங்களின் காரண-லக்ஷணாதிகள் 16-அத்தியாயங்களில் விவரிக்கப்படுகின்றன.

ஆக இந்த முதற்பாகத்தில் 52-அத்தியாயங்கள் அடங்கியுள்ளன. முகவுரையும், ஒவ்வொரு பக்கத்திலும் வியாக்யாநமும், விஸ்தாரமான விஷய அகராதியும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பிராசீன யந்திர சஸ்திரங்களென்ன, சரீர தத்துவங்களென்ன இவற்றை விளக்கும் சித்திரப் படங்கள் அநேகம் அச்சிடப்பட்டிருக்கின்றன. வைத்திய கலாநிதியின் அளவில் 450-பக்கங்களுக்கு மேல் கொண்டது.

விலை ரூபா- 5-0-0.

வைத்திய-கலாநிதி ஆபீஸ், வேப்பேரி, மதராஸ்.



# மின்சார ரசம்.

(அறிக்கை.)

சென்ற ஒரு வருஷத்திற்கு அதிகமாக சேலம் ஆர். கிருஷ்ண அண்டுகோ என்ற விலாசத்தார் இம்மருந்தை விற்று வந்தார்கள். இம்மாதம் 7-ம் தேதி முதல் இம்மருந்தை மேற்படி கம்பெனியில் விற்பது நிறுத்தப் பட்டிருக்கிறது. இனிமேல் "மின்சார ரசம் கம்பெனி" சேலம் என்ற விலாசத்தாரிடம்தான் மின்சார ரசம் விற்கப்படும். இனிமேல் ஆர். கிருஷ்ண அண்டு கம்பெனியார் யாதாவது மருந்து விற்றால் அது டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்களின் மருந்து அல்ல.

மானேஜர், மின்சார ரசம், கம்பெனி, சேலம்.

## KESARI'S THREE GEMS.

## கேஸரியின் இரத்ன திரயம்.

### LODHRA

**BEST UTERINE TONIC**

லோத்ர

ஸ்திரீகளுக்கோர் வரப்ரஸாதினி

ஸ்திரீகளுக்கு அநேக காரணங்களினால் ரஜோகர்ப்பாசயம் கெட்டு ருதுசூலை சம்பவிக்கிறது. இது ஸ்திரீகளுக்கு ஓர் பெரும் பூதமோ எனப் பயப்படக்கூடியது. இந்தக் கொடிய வியாதியுள்ளவர்கள் இன்னும் அநேக மர்ம வியாதிகளுக் கிரையாவதேயன்றி புத்திரபாக்கியமில்லாதவர்களாய்க்கூட இருக்கிறார்கள். இவ்வபாயமாகிய வியாதியை வேருடன் அறுப்பதற்கு எங்களிட "லோத்ர" அசமானமாகிய மருந்து.

இந்த 'லோத்ர' மேற்கூறிய வியாதியை நிவர்த்திப்பதேயன்றி காலத்தில் பஹிஷ்டையாகாமலிருப்பது, பஹிஷ்டை நின்று விடுவது, பஹிஷ்டை காலத்தில் ரஜஸ்வலை சரியாய் ஆகாமல், ஜாஸ்தியாய் அல்லது குறைச்சலாய் போவது, சோமரோகம், மேஹவியாதிகள், மூர்ச்சை, சந்தானமின்மை, தலைவலி, அஜீர்ணம், பலஹீனம், ரத்தஹீனம், சீரம், ஸ்தூலித்திருப்பது, இளைத்திருப்பது, மலபந்தம், இருமல், விக்காக்கை முதலிய வியாதிகளை மிகவும் நம்பகமாய் நிவர்த்தித்து சரீரத்துக்கு காந்தியும் முகத்திற்கு தேஜஸையும் கொடுக்கின்றது.

ஆரியர்காள்! ஸ்திரீகளிடத்தில் அபிமானமுள்ள புருஷர்களெல்லாம் இவ்வவுஷத மணியை உபயோகிக்கச் செய்து அவர்கள் தேக சௌக்யத்திற்கு பாத்திரளாய் இருப்பீர்களாக.

அநேக ஸ்திரீகள் சந்தான ஹீனர்களாய் அரசமரபிரதக்ஷணம், ஆஞ்சநேய ப்ரதக்ஷணம், அநேக புண்ணிய க்ஷேத்திரயாத்திரை முதலியவை செய்தும் பலனடையாமல் கடைசியில் எங்களிட "லோத்ர" வையுபயோகித்து புத்திர பாக்கியமடைந்து சுகமாயிருக்கிறார்கள்.

இதன் விலை பெரியபுட்டி ரூ. 3—0—0. சிறிய புட்டி ரூ. 1—10—0.

### AMRITA

**BEST BLOOD PURIFIER**

அமிருத

இரக்தசுத்தி திராவகம்.

இவ்வவுஷதராஜம் லோகப்பிரசித்தமானபடியால் இதைக்குறித்த இங்கு விவரமாய் எழுதுவது அநாவசியமென்று தோன்றியபடியால் சுருக்கமாய் எழுதுகிறோம்.

இதனால் ரக்தக்ஷீணம், ரக்ததோஷம், அஜீரணம், இந்திரிய நஷ்டம், சுவப்னஸ்கலிதம், பலஹீனம் மலபந்தம், பாண்டு, காமாலை, சர்மவியாதிகள், சுகசங்கடங்கள், தலைவலி, கண் எரிச்சல், வயிற்றுவலி, விக்காக்கை, கைல்நோய், மேகரணங்கள் முதலிய வியாதிகள் அதிசீக்கிரமாய் நிவர்த்தியாவதே யல்லாமல் இது ரக்தத்தை சுத்தி செய்து பலஹீனம் எந்தக் காரணத்தினால் உண்டானபோதிலும் பெருங்காற்றி லடித்துக் கொண்டுபோகும் பருத்தியைப்போல் படாபஞ்சமாய் பரிக்கச்செய்யும்.

இதன் விலை பெரிய புட்டி ரூ. 3—0—0.
சிறிய புட்டி ரூ. 1—10—0.

### ARKA

**BEST CURE FOR INFLUENZA AND ALL OTHER FEVER.**

அர்க்க

இன்புளுயன்சா முதலிய சர்வ ஜ்வர நிவாரணி.

இதனால், பிரதிதினம் வரும் ஜ்வரம், ஒருநாள் முறை ஜ்வரம், நின்று நின்று வரும் ஜ்வரம், புராண ஜ்வரம், மலை ஜ்வரம், குளிர் ஜ்வரம், இன்புளுயன்சா முதலிய சர்வ ஜ்வரங்களும் மூன்று வேளையில், நிவர்த்தியாகும். இந்த அவுஷதத்தை உபயோகிப்பதினாலேயே ஜ்வரக்கட்டிகள் அதிக ஆச்சரியமாய் மாயமாய்விடும். இவ்வவுஷதம் மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டபடியால் குழந்தைகள் முதல் வயோதிகர் வரையில் எத்தகைய சந்தேகமுமின்றி உபயோகிக்கலாம்; தவிர இதனால் மலபந்தகம், சளிபிடிப்பு, அஜீரணம், தலைவலி முதலியவை நிவர்த்தியாகும்.

இதன் விலை புட்டி 1-க்கு ரூ. 1—8—0.

கே. என். கேஸரி, வைத்தியர் & வைத்திய சாலாதிகாரி,

"கேஸரிகுடீரம்" ஆயுர்வேத ஔஷதசாலை, 33, போலீஸ் கமிஷனர் ஆபீஸ் ரோட், எழும்பூர்.



# வைத்திய கலாநிதி

# THE VAIDYA KALANIDHI

EDITOR:
Ayurveda Bhushan
Pandit M. Duraiswami Aiyangar A. K. A. C.
Senior Physician-in-charge, S. K. P. D. Hospital.

பத்திராதிபர்:
ஆயுர்வேத பூஷணம்
பண்டித எம் துரைஸ்வாமி ஐயங்கார்,
எஸ். கே. பி. டி. ஆஸ்பத்ரியின் பிரதான டாக்டர்.

புஸ்தகம் 8. Vol. VIII. | ரௌத்ரி ஸு தை மாசிமீ. JANUARY & FEBRUARY, 1921. | No. 1. ஸஞ்சிகை 1.


## AYURVEDIC SYSTEM OF SURGERY

### சல்ய தந்திரம்.

BY THE LATE VAIDYARATNAM
PANDIT D. GOPALACHARLU.

"சலதி-ஆசு கச்சதி" என்னும் தாத்வர்த்தத்தினால் நம்முடைய சரீரத்தில் மிக்க விரைவாகவும் தீக்ஷ்ணமாகவும் பிரவேசித்து மனம் உடல்களுக்குத் துன்பத்தை யுண்டாக்கும்வஸ்துவிற்கு "சல்யம்" எனப்பெயரிடப் பட்டது. விஷத்தினால் பூசப்பட்ட அத்தகைய பாணங்கள் முற்காலங்களில் யுத்தாதிகளில் ஒருவரை யொருவர் ஜயிக்கவேண்டு மென்ற இச்சையினால் பிரயோகித்தல் இயல்பு. அவைகளை உடலிலிருந்து வெளிப்படுத்துவதற்காகப் பலவகைகளான இயந்திர சஸ்திரங்கள் அக்காலத்தில் கண்டறிந்து கொள்ளப்பட்டன. தேவ வைத்தியர்களாகிய அச்வினீ தேவதைகளால் யஞ்ஞதேவனுடைய சிரஸ்ஸந்தானம் (தலைபைச் சேர்த்தல்) முதலிய க்ரியைகளில் சஸ்திர சிகிச்சைகள் அநேகம் விதமாகச் செய்யப்பட்டதாக ருக்வேதம் முதலியவைகளில் காணப்படுகின்றன. வேதகாலங்களில் எத்தகைய இயந்திர சஸ்திரங்களைக் கொண்டு சஸ்திர சிகித்ஸா முறைகளை எவ்விதமாகச் செய்து கொண்டிருந்தனரோ அவ்விவரங்கள் தெரியாம லிருப்பினும், அக்காலத்தியவர்கள் செய்த சஸ்திர சிகித்ஸைகளுடைய நிபுணத் தன்மையை போதிக்கும் "தஸ்மாதக்ஷிநாஸத்திய"; "ஸத்யோ ஜங்காம் ஆயஸீம் விஸ்பலாயை", "யஜ்ஞஸ்ய சிரோச்சித்யத" என்னும் ச்ருதிகளை ஆராய்ந்தால், அவை இக்காலத்திய புதிய சஸ்திர முறையறிஞர்களால் புகழத்தக்கவையா யுள்ளன. வைதிக யுகத்திலேயே ஆரம்பமான சல்ய தந்திரத்தினுடைய செய்முறைகள் சரகர், ஸுச்ருதர், வாக்படர் முதலியோரின் காலங்களில் கிரமமாயடைந்த அபிவிருத்தியைக் கொஞ்சம் வரையிலும் நமது நேயர்களின் பொருட்டு இங்கு அறிவிக்கின்றோம்.

பாடநம், வ்யதநம், சேதநம், லேகநம், ப்ரச்சந்நம், ஸீவநம் என்னும் ஆறுவகைகளான சஸ்திர கர்மமுறைகளை சரகர் தெரிவித்துள்ளார். ஸுச்ருதர் ஆஹார்ய, விஸ்ராவ்யங்களென்னும் இரண்டுவகையான சஸ்திர கர்மங்களை மேல் சொல்லியவைகளுடன் சேர்த்து எட்டு எனக் கூறினர். வாக்படர் தம்முடைய அஷ்டாங்க ஸங்கிரஹத்தில் குட்டநம், உத்பாடநம், மதநம், உத்தரணம் என்னும் நான்கு வகை சஸ்திர கர்மங்களை மேற் சொல்லியவை

145255

களுடன் சேர்த்து பன்னிரண்டு வகையென்று தெரிவித்தனர். மற்றும் வாக்படர் தன் அஷ்டாங்க ஹ்ருதயத்தில் சலாகையினால் செய்யத்தக்க தாஹகர்மத்தையும் சேர்த்து சஸ்திர கர்மங்களுடைய முக்கியமான செய்முறைகள் பதின்மூன்று விதங்களென்று ஸித்தாந்தப்படுத்தியுள்ளார். பதின்மூன்று விதங்களான சஸ்திர கர்ம முறைகளை யுபயோகிக்கும்படியான சஸ்திரங்கள் இருபதென்றும், இயந்திரங்கள் 101 என்றும் ஸுச்ருதர் தெரிவித்திருக்கிறார். இதில் சலாகை, கர்த்தரி, ஸர்பவக்த்ரம், கர்ணவ்யதநஸூசீ, ஸூசீ, கூர்சம், கஜம் என்னும் ஆறு விதங்களான சஸ்திரங்களை வாக்படர் அதிகமாகக் கூறியிருக்கிறார்; மேலும் சல்யதந்திரத்தில் மொழியப்பட்டுள்ள பக்நம் முதலிய விரணங்களுக்கு உபயோகப்படுத்தும் பந்தனங்கள் பதின்மூன்று விதங்களென்று தெரிவித்தார். மேற் கூறப்பட்ட இயந்திர சஸ்திர பந்தனாதிகளைக் காட்டிலும் அதிகமாக அந்தந்த சஸ்திர வேலைகளுடைய ஸமயங்களை யனுஸரித்து உபயந்திரம் முதலிய பதார்த்தங்களைப் பலவற்றைக் கூறியிருக்கிறார்.

சஸ்திரங்களின் பொருட்டு உபயோகிக்கும் உலோகத்தைப் பற்றிய "ஸுதீக்ஷணவர்திதேயஸீ" என்னும் இவர்களுடைய மொழிகள் புகழத்தக்கவை. சஸ்திரங்களுடைய பதன், மெருகு, முதலியவைகளைக் குறித்து விரிவாக அந்தந்த சஸ்திரங்களுக்குத் தெரிவித்திருக்கின்றார். சஸ்திரங்களுக்குள்ள கூர்மையானது மயிரை நிகளத்தில் இரண்டாகப் பிளக்கும்படியானதாக இருத்தல் வேண்டுமென்று மொழிந்துள்ளனர்.

மஹருஷிகளால் அறிவிக்கப்பட்ட ஸிம்ஹமுகம், கங்கமுகம் முதலிய இயந்திரங்கள், விருத்திபத்ரம், வேதஸபத்ரம், மண்டலாக்ரம் முதலிய சஸ்திரங்கள் முதலியவைகளையே ஆங்கில வைத்திய விசாரதர்கள் பாஷையின் வேற்றுமையால் வேறு பெயர்களால் வழங்குகின்றார்களே யல்லாது, இயந்திர சஸ்திரங்களில் எத்தகைய வேற்றுமையும் இல்லையென்று கீழ்நாட்டு மேல்நாட்டு வைத்தியசாஸ்திர நிபுணர் பலர் மொழிந்திருக்கின்றனர், அந்தந்த வியாதிகளில் இயந்திர சஸ்திரங்களை யுபயோகிக்கும் வகையையும், இயந்திர சஸ்திரங்களுக்கு அக்னிதாபம், பாஷ்பஸம்யோகம் முதலியவைகளைச் செய்து கெடுதி யுண்டாகா வண்ணம் காப்பாற்றுவதையும், விரணங்களைக் கட்டுவதற்காக உபயோகிக்கும் வஸ்திரங்கள் முதலியவைகளில் ஸூக்ஷ்மக் கிருமிகள் முதலியவை யணுகாமல் ரக்ஷண தூமங்களையும், அஸ்திபக்நம் (எலும்பு முறிதல்) முதலியவைகளில் பிணியாளிகளுக்குத் துன்பம் தெரியாமலிருக்கும்படி கபாடசயனம் முதலியவைகளையும், அறிவித்திருக்கின்றனர். ஸுச்ருதர் தன்னுடைய கிரந்தத்தில் பலவகையான இயந்திர சஸ்திரங்களையும், செய்முறை (பிரக்ரியா விதானங்)களையும் போதித்திருத்தலே யல்லாமல் வெளி இந்திரியங்களுக்குப் புலப்படாத பிரதேசங்களில் அங்குளிஸ்பர்சம் (விரலினால் தொட்டு உணர்வது) முதலியவைகளினால் பிணியின் இரஹஸ்யங்களை நன்றாகத் தெரிந்து கொள்ளும் உபாயங்களை போதித்திருக்கின்றனர். சல்யதந்திர விஷயத்தில் ஸுச்ருதருடைய வாக்கியங்களைப் படிப்பதொன்றுதான் மிச்சமாயுள்ளதே யன்றி க்ரியாம்சத்தில் நாம் ஒன்றும் செய்வதற்கில்லை யென்பதையறிய இந்திய தேசாபிமானி எவனுக்காயினும் துக்கமுண்டாகாமலிராது. காயசிகித்ஸாப் பிரசாரத்தினால் மாத்திரமே கௌரவ பதவிகளையடைந்த தேசிய வைத்திய ஸஹோதரர்களிடத்திற்கு ஸாதாரணமாகக் காதில் சீழ் வருதல், கல் அடிபடுதல் முதலியவைகளால் துன்பப்படும் ஸாமானிய பிணியாளிகள் சிகித்ஸைக்காக வந்தபொழுது தெரியாதென்று கூறுதல் பாரத ஸந்ததியைச் சேர்ந்த நமக்கு வெட்கம்



உண்டாக்குவ தல்லவா? சல்யதந்திர வேலைகளைச் செய்வதில் முதன்மை பெற்றவர்களும், ஒப்பற்றவர்களுமான ஔபதேநவர் முதலியோரைச் சேர்ந்து விளங்கியவரும் புகழத்தக்கவருமான ஸுச்ருதருடைய ஸந்ததியைச் சேர்ந்த நாம் சல்லிய தந்திரச் செய்கைகளுக்குத் தூரமாயிருத்தல் கௌரவமா? இனியாவது ஆர்ஷஸந்ததியைச் சேர்ந்த ஆர்ஷவைத்திய முறை யறிஞர்கள் சல்யதந்திர முறைகளில் நம்முன்னோர்கள் கௌரவத்தைப் பெற்றார்களென்பதோடு திருப்தி யடைவதைக் காட்டிலும், தாங்களே அம்முறைகளை அனுஷ்டித்து, தங்கள் ஸந்ததியாரைக்கூட சல்ய தந்திரஞ்ஞர்களாகச் செய்வதற்கு ஸமயம் வாய்ந்திருக்கின்றது. ஸுச்ருத மதத்தை யனுஸரித்த சல்யதந்திரச் செய்முறைகள் கொஞ்ச காலமாக ஸம்பிரதாயத்தை யனுஸரித்ததான அனுஷ்டானத்திற்கு தூரமாயுள்ளன. ஆகையால் அவைகளில் ஐயமுற்ற அம்சங்களை மேல்நாட்டு சஸ்திர முறையறிஞர்களிடமிருந்து தெரிந்து கொள்ளுதல் தேவையாயுளது. இப்படிச் செய்தல் அவமானத்தை யுண்டுபண்ணுவதென்று நினைக்கலாகாது. சில நாட்களுக்குள்ளாகவே ஆர்ஷ சல்யதந்திர முறைகளை வெளிப்படுத்தல் நம் கடமை. இப்பொழுதே ஆர்ஷ வைத்திய முறையில் சஸ்திர சிகித்ஸா முறைகள் இல்லையெனவும், மேல்நாட்டு வைத்தியவல்லோரே இவைகளில் நிபுணர்களென்றும், உலகத்தில் பிரஸித்தியொன்று பரவியுள்ளது ஆர்ஷஸந்ததியைச் சேர்ந்த பாரதீயர்கள் ஆர்ஷ வைத்தியத்திலுள்ள சஸ்திர சிகித்ஸா முறைகளை வெளிப்படுத்தித் தங்களுடைய சுருசுருப்பற்ற தன்மையினால் மஹர்ஷிகளுக்கு சஸ்திர சிகித்ஸாமுறை தெரியாதென்றுண்டான களங்கத்தைக் களைந்து விடுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

## THE MALARIA.

### விஷமஜ்வரம்.

By K. SUBRAHMANYAM
AYURVEDIC PHYSICIAN.

மனிதர்களைத் துன்பப்படுத்தும் முக்கியமான பிணிகளுள் ஜ்வரம் ஒன்று. இது வியாதி ஸாமானியத்தில் அடிக்கடியும் துன்பப்படுத்தும் தன்மையுள்ளது இது அநேக வகைப்படும். இதன் பெயரை யறியாதவர்களாவது இதை யனுபவிக்காதவர்களாவது இலர் என்பது நிச்சயம். ஜ்வரங்களுக்கு வேதத்தில் "திங்கம" என்று பெயர் வைத்தனர். குளிர்ஜ்வரம் ஸந்ததம், ஸததம் அந்யேத்யுஷ்கம், த்ருதீயகம், சதுர்த்தகம் என்னும் பேதங்களால் ஐந்து வகையென்று அதர்வவேதத்தில் மொழியப்படுகிறது இவைகளையே ஏகாஹிக, த்வியாஹிக, திரியாஹிக, சாதுர்த்திக ஜ்வரங்களென்னும் வேறு பெயர்களாலும் மொழிகின்றனர். இவ்வைந்து வகையான ஜ்வரங்களும் த்ரிதோஷங்களுடைய பிரகோபத்தால் உண்டாகும் என்று ஆயுர்வேதத்தின் கொள்கை. இவ்வைந்து ஜ்வரங்களும் போக்குவரவுகளின் காலத்திலும், வேகத்திலுல் ஏற்றக்குறைவு உள்ளவை யாகையாலும், விட்டுவிட்டு வருவதாலும், இவைகளுக்கு விஷம ஜ்வரங்களென்று ஆயுர்வேதத்தில் பெயரிட்டனர் இவைகளில் ஸந்தத ஜ்வரத்தில் முக்தானுபந்த (விட்டுவரும்) லக்ஷணங்கள் காணப்படாமையால் சிலர் இதை விஷம ஜ்வரங்களில் உட்பட்டதல்ல வென்கிறார்கள். இவ்வைந்து வகையான ஜ்வரங்களும் வேதத்தில் பிரதிபாதிக்கப்பட்டவைகளாகையால் மிகப்பிராசீனமானவை. இக்குளிர் ஜ்வரங்களையே மேல்நாட்டு வைத்தியர்கள் 'மலேரியல் பீவர்ஸ்' என்றும், அவை ஐவகைப்பட்டதெனவும், ஒருவிதமான கொசுக்கடியால் உண்டாகுமென்றும் மொழிகிறார்கள். இவைகளின் காரணங்களை

அடக்குவதற்கும், பிணிகளை நிர்மூலப்படுத்துவதற்கும் அரசாங்கத்தாரும், சுகாதார அதிகாரிகளும், முனிஸிபல் அதிகாரிகளும், ஆங்காங்கு அநேக முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கின்றனர். தேச ஸஞ்சாரம் செய்யும் வைத்தியர்களை யனுப்பி சிகித்ஸாதானம் செய்கின்றனர். தேசீய வைத்தியர்களும் அநேக விடங்களில் வேலை செய்கின்றனர். யார் எதைச் செய்தாலும் அது பரவுவது மாத்திரம் குறையவில்லை. இதற்கு அரசாங்கத்தாருடைய வைத்தியாதிகாரியால் வெளிப்படுத்தப்படும் வருஷாந்த அறிக்கைகளே போதிய அத்தாட்சி. இந்த ஜ்வரத்தை நீக்குவதற்காகக் கசப்புச் சுவையுள்ள வஸ்துக்களும், திரவரூபமாயுள்ள கஞ்சி முதலிய ஆஹாரங்களும் தக்கவைகளென்று 'யவாக்வ: திக்தகோ ரஸ.' என்னும் முக்கிய ஸூத்திரத்தினால் சரகர் அறிவிக்கிறார். இதனால் பிணியாளிக்கு கசப்புச்சுவையுள்ள வஸ்துக்கள் உத்தமங்களென்று பண்டைக் காலத்திய பரிசோதகர்களின் கொள்கையெனத் தெளிவாகின்றது. அவர்களுபயோகிக்கும் கசப்புச் சுவையுள்ள சரக்குகள் நிலவேம்பு, கடுகரோகிணி, கோரைக்கிழங்கு, பர்ப்பாடகம், சீந்திற்கொடி, ஆடாதோடை, வேப்பம்பட்டை, பேய்ப்புடல், கண்டங்கத்திரி இவை முதலியன. இவை ஸாமானியமாக எல்லா ஜ்வரத்திற்கும் ஹிதம் தருபவை யென்றார்கள். இவைகளையே ஸாமானிய ஜ்வரங்களில் கஷாயங்களாகவும், புராண ஜ்வரங்களில் இவ்வஸ்துக்களால் அரிஷ்டங்களையும் கிருதங்களையும் ஸித்தப்படுத்தி யுபயோகித்தலும் ஹிதமென்கிறார்கள். ஊஷ்ம (உஷ்ணம்) பித்தங்கள் வேற்றுமையற்றவை யென்றும், ஆச்ரயமும் (இருப்பிடமும்) ஆச்ரயித்ததும் ஆக இவ்விரண்டையும் குறைப்பதற்குக் கசப்புச்சுவையே பிரதானமானதாகையினால் ஜ்வரத்திற்குக் கசப்புச்சுவையே உத்தமமானதென்றும் அறிந்து கொண்டனர். இந்த முக் ஸூத்திரத்தையே மேல்நாட்டு வைத்தியர்கள்கைக்கொண்டு கசப்புச்சுவை முக்கியமாயுள்ள 'க்வினைன்' என்னும் மருந்தை ஜ்வரங்களுக்கு ஸித்தௌஷதமாகக் கண்டுபிடித்துள்ளார் இந்த க்வைனப்பட்டையிலிருந்து ஸத்வத்தை எடுத்து உபயோகிக்கின்றனர். இது குளிர் ஜ்வரங்களை அடக்கச் செய்வதைக் காட்டிலும் அதிகமாய் தலைச்சுற்றல், காதுகளில் ஓசை, வாந்தி முதலிய உபத்திரவங்களை யுண்டுபண்ணுகிறது. இது ஸத்துவத்தை யெடுத்து உபயோகிக்கப்படுவதால் அதில் கசப்புச் சுவையின் சக்தி யதிகமாகி தான் செய்யக்கூடுமான பிணி நாசனத்தைச் செய்து, பித்தத்தை அதிகமாக க்ஷீணிக்கச் செய்யும் அதனால் வாதம் பிரகோபித்து மேல் துர்குணங்களை யுண்டாக்குகின்றது. இது சுயரூபத்தில் (ஸத்தல்லாமல் அந்த வஸ்துவையே) உபயோகித்தால் மேல் துர்குணங்களுக்கு இடத்தை யுண்டாக்காது. ஆரியர்கள் அறிவித்த கசப்புச் சவையுள்ள வஸ்துக்களுள் இத்தகைய துர்குணங்களெவையும் இல்லையென்பது ஸ்பஷ்டம். தற்காலத்திய பரிசோதகர்களான சில மேல்நாட்டு வைத்தியர்கள் குவினைன் ஜ்வரத்திற்கு ஸித்தௌஷதமல்லவென்றும், இது குணத்தைக் காட்டிலும் துர்குணங்களை பிராணிகளுக்கு அதிகப்படுத்துகிற தென்றும் தெரிவிக்கின்றனர். அநேகர், ஆரியர்கள் அறிவித்த பஞ்சதிக்தங்களை உபயோகிக்கின்றனர். அவை பாரதீயர்களுக்கு விரோதமுண்டு பண்ணாதவை, அவர்களுடைய பிரகிருதி (தன்மை)களுக்கு அநுகூலமானவை. ஆர்யர்கள் மூலிகைகளின் பரிசோதனைகளுடன் கனிஜவஸ்துக்களைக்கூட ஔஷதங்களாக அறிந்தனர். அவைகளில் ரஸகம், தாளகம், மனச்சிலை, நீலாஞ்ஜனம் முதலியவை புகழ்பெற்றவை. இவ்வஸ்துக்களுடன் கூடிய "சிதாம்சுரஸம்" என்னும் ஔஷதம் மிக்க நல்லது. ராமபாணரஸம், தாளகேச்வரம் அல்லது வாதாக்னிகுமாரம் இவை புராண ஜ்வரங்களை நீக்குவதில் புகழத்தக்கவை. கிரமமறிந்து இவைகளை யுபயோகிப்பதால் எத்தகைய அபாயங்களும் உண்டாகா. புராண ஜ்வரங்களில் வயிற்றில் ப்லீஹம் அபிவிருத்தியடையும். ஸவராஜீயம், சிந்தாமணி இவைகளில் நிரூபிக்கப்பட்ட சங்கத்திராவகம் மஹாசங்கத்திராவகம் இவைஜ்வரக்கட்டிகளில்மிக்க சிறந்தவை. இந்த திராவகங்களை பஞ்சதிக்தத்துடன் சேர்த்துக் கொடுத்தல் விசேஷமாகும். 'காலாஹலஸார்' என்னும் ஜ்வரத்திலும் ஷை ஔஷதங்கள் விசேஷகுணம் தருபவை. பஞ்சதிக்தமும், சீதாம்சுரஸமும் குளிர் ஜ்வரங்களுக்கு நல்ல ஔஷதங்கள்.



---

## SOME TALES OF INSANITY*

### சில உந்மாத ரோகிகளின் உண்மைக் கதைகள்.

BY. Dr. K. J. DHOLAKIA, L. M. & S.
*Personal Physician and Surgeon to the Nawab of Rampur.*

எனக்குத் தெரிந்த உபாத்தியாயர் ஒருவர். அவர்சிறந்த கல்விமான்.நல்ல புத்திகூர்மையுள்ளவர். நியதமான நல்ல நடத்தை யுடையவர். இவருக்கு மனைவிமார் இரண்டு பேர். பிளேக் வியாதியால் இவருடைய இளைய மனைவியும் இரண்டு குழந்தைகளும் இறந்துவிட்டார்கள். வழக்கமான பள்ளிக்கூட வேலையைச் செய்துகொண்டே இவர் வக்கீல் பரீக்ஷைக்கும் படிக்க ஆரம்பித்தார். பரீக்ஷை முடிந்ததும் மறுபடி இவர் மணம் செய்துகொண்டார். இவ்வாறு பல துறைகளிலும் மனம் சஞ்சலப்பட்டு அலைந்து கஷ்டப்படவே இவரது மூளை சோர்வுற்று விகாரமடையும்படியாயிற்று. இவர் உத்ஸாஹம் குன்றியவராய் வித்தியாசாலையின் வேலையிலிருந்து விலகிக்கொண்டார். வேலையின்றி வீட்டிலேயே மௌனமாக உட்கார்ந்திருப்பார். பகல் முழுதும் உயர்ந்தது கால்படி பால் சாப்பிடுவர்; அதைத் தவிர வேறு உணவு எதுவும் கிடையாது. நான் வைத்தியம் செய்வதற்காக எப்பொழுதேனும் அவரிடம் செல்லும்பொழுதெல்லாம், நான் கேட்ட கேள்விகளுக்குக் கொஞ்சம் ஸமாதானம் சொல்லுவர்; அதுவேயன்றி வேறெவரிடமும் எவ்வளவு நிர்பந்தித்துக் கேட்டபோதிலும் ஒன்றும் பதில் சொல்லவேமாட்டார்.

தனக்குப் பசியில்லாமையாலும், ஜீர்ணித்துக்கொள்ள முடியாமையாலும் தான் சாப்பிடக்கூடவில்லையென்றும், தான் மிகவும் பலஹீனமடைந்திருப்பதால் நடந்து வெளியிற் செல்லவாவது, பேசவாவது ஸாத்தியப்படவில்லையென்றும், தான் மிக்க இளைத்துப்போய்விட்டதே இடைவிடாத மனக் கவலைக்குக் காரணமென்றும் ஆக இவ்வளவு மாத்திரம் பேசுவர்; அவருடைய தேஹநிறை அச்சமயம் எவ்வளவாக இருக்கலாமென்று அவர் உத்தேசிக்கிறார் என்று நான் வினவினால், தன்னுடைய உடலின் கனம் பன்னிரண்டு பவுண்டு இருப்பதுகூட அரிது என்று பதிலளிப்பர்.

ஒரு நாள் மாலைப்பொழுதில் தன் வீட்டுத் தாழ்வாரத்தில் கவலையின்றி அமைதியாக அவர் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது அவரைப் பார்க்க இரண்டு ஸ்நேஹிதர்கள் வந்தார்கள். அவ்விருவரில் ஒருவர் மாடியின்மேல் சென்றார்; பிறகு இவர் கீழே ஒரு தாழ்வாரத்திலிருப்பதாகத் தெரிந்துகொண்டு இவரை மேலே வரும்படியாக மாடியின்மீதிருந்துகொண்டே அழைத்தார். சில நிமிஷம் கழித்து வந்த மற்றொரு நண்பர் அவ்வீட்டு வாயிற்படியில் நின்றுகொண்டே இவரை வாயிலில்வரும்படி கூப்பிட்டார். இவருடைய மனைவி, வந்திருப்பவரிடம் இவரைச் சென்று பேசச் சொல்லி பலவந்தம் செய்தாள். சுமார் அரை மணி நேரம் அவ்வம்மை தந்திரமாக இச்சகங்கள் பேசி கேட்டுக்கொண்டதன்மேல், இவர் நண்பர்களைக் கண்டு பேச இசைந்தார். எழுந்திருந்து ஏழெட்டு அடி தூரம் சென்று, வீட்டு முற்றத்தில் இருக்கும் ஒரு கிணற்றின் மேடையின் பக்கத்தில் நின்றுகொண்டார். மேலே இருக்கிற நண்பரிடம் போகலாமாவென்று

* Translated specially for the Vaidya kalanidhi.

மாடியையும், வாயிற் பக்கத்தில் காத்துக்கொண்டுள்ள ஸ்நேஹிதரிடம் போகலாமாவென்று வீட்டுக்கு வெளிப்புறமான வாயிற்படியையும் திரும்பத்திரும்ப மாறி மாறிப் பார்த்துக்கொண்டு எந்த நண்பரிடம் போகலாமென்று தனக்கே யோசனை தோன்றாமல் அவர் உடனே அருகிலிருந்த கிணற்றுக்குள் குதித்துவிட்டார் !!!

வந்திருந்த நண்பர்களும் மற்றவரும் ஓடிவந்து அவரைக் கிணற்றிலிருந்து அபாயமொன்றுமில்லாமல் வெளியிலெடுத்துவிட்டதும், அவருக்குச் சுபாவமான நல்ல அறிவு வந்துவிட்டது. குளிர்ந்த ஜலத்தில் மூழ்கியதும் அவருடைய மூளை குளிர்ச்சியடைந்து மனம் நன்கு தெளிவெய்தியது. அதன்பிறகு தான் செய்த முட்டாள்தனத்தையெல்லாம் நினைத்துத் தனக்குத் தானே மிகவும் வெட்கமுற்றார்.

இந்த மாதிரியான மதிப் பிரமை இவருக்குச் சுமார் ஆறுமாஸ காலம் நீடித்திருந்தது. பிறகு அவர் தன் பழைய உத்தியோகத்தில் சேர்ந்து சுகமாய் வாழ்ந்து வந்தார். இவரது மனைவிக்கும் இவரது நிலைமை மாறியதைக் கண்டு மகிழ்ச்சி மிதமிஞ்சியுண்டாயிற்றென்று நேயர்களுக்குக் கூறாமலே விளங்கும். சீக்கிரத்தில் அவருக்கு ஒரு ஆண் குழந்தையும் பிறந்தது.

பின்னர் எட்டு வருஷங்கள் கழித்து இவருக்கு மறுபடியும் மனநோய் ஆரம்பித்துவிட்டது. அவருடைய இளைய மனைவி க்ஷயரோகத்திற்கு உட்பட்டுவிட்டாள். அவருடைய ஒரு ஆண் குழந்தையும் கல்லீரல் வியாதியால் உயிரிழந்தது. அடுத்தாற்போல வியாதியும் கவலையும் பலமாக மேற்கொள்ள அம்மனைவியும் மரணமடைந்தாள். இந்த ஸ்திதியில் இவரது மனோ நிலைமை முற்றிலும் சீர்கெட்டு அப்பால் சில வாரத்திற்கெல்லாம் அவரது ஆயுளுக்கும் முடிவு உண்டாகி விட்டது !!!

2. தாகூர் என்கிற 25 வயதுள்ள இந்து வாலிபன் ஒருவன் தன் தகப்பனை இழந்தான். அத் தகப்பன் இராணுவத்தில் சுபேதார் மேஜர் என்கிற பதவியில் இருந்து வந்தவன். அவ்வாலிபன் வேலையேதுமின்றி சோம்பேறியாக வீதியில் எப்பொழுதும் அலைந்து திரிந்துவந்தான். இவன் ஒரு ஸமயம் டொப்பியிட்ட ஒரு கனவானிடம் சென்று ஏதோ பிச்சை வேண்டினான்; அக்கனவான் இவனைப் பிடித்துப் போலீஸ் அதிகாரியினிடம் ஒப்புவித்துவிட்டார். போலீஸார், இவனது தேஹ மனோ நிலைமைகளைப் பரிசோதித்துத் தமக்கு அறிவிக்கும்படி வைத்தியாதிகாரிக்கு எழுதி இவனை ஆஸ்பத்ரிக்கு அனுப்பினார்கள்.

நானும் வேறு சில வைத்தியர்களுமாக ஆஸ்பத்ரியில் இவனைப் பரிசோதனை செய்தோம். அவனுக்குப் புத்தி மாறாட்டம் சிறிதும் இருப்பதாகக் காணப்படவில்லை; அமைதியும் சாந்தமும் பொருந்திய மனப்போக்குள்ளவனாகவே தோன்றினான். அவனுக்கு இங்கிலீஷும், ஹிந்தியும் நன்றாகத் தெரியும்; அவவிரண்டிலும் அவனது கையெழுத்து வெகு அழகாயிருந்தது. அவனுடைய பேச்சிலாவது,செயல்களிலாவது உந்மாதக்குறி (பித்துக்குறி) ஒரு சிறிதேனும் இருப்பதாகக் காணக்கூடவில்லை அவனுடைய மனோ நிலையையில் எவ்விதமான அவக்குறியையும் கண்டு பிடிக்க எங்களால் முடியவில்லை. ஆகிலும் அவனை ஆஸ்பத்ரியிலேயே வைத்தியர்களின் மேற் பார்வையில் ஒரு வாரம் வைத்திருப்பது நலமென்று நான் தீர்மானித்ததன்மேல் அங்ஙனமே செய்யப்பட்டது. அவன் குடிப்பதுமில்லை, மாம்ஸ போஜநமும் செய்வதில்லை. வெகு ஸாதாரணமான சகாஹாரமே அவனுக்கு வழக்கமான உணவு.

நான் தினப்படி ஆஸ்பத்ரியிலுள்ள பிணியாளிகளைச் சுற்றிப் பார்த்து வருவதுபோல, இவனையும் தினந்தோறும் ஒரு முறை பார்த்துவிட்டுப் போவேன். ஒரு நாள் இவனிடம் போனபோது பின்வருமாறு அவனுக்குப் புத்திமதி கூறினேன்:—"உன்னைப் போன்ற



வாலிபன், வேலை செய்து கௌரவமாகப் பிழைக்கக்கூடிய தேஹ வலிமையும் புத்தியும் போதியவளவு இருக்கையில் பிச்சையெடுப்பது வெகு வெட்கக்கேடான விஷயம். நீ அவ்விதம் செய்வது நியாயமல்ல. நீ சோம்பித் திரியவேண்டிய அவசியமில்லை. உனக்கு இந்த வைத்திய சாலையிலேயே ஒரு வேலையேற்பாடு செய்கிறேன் உனக்கு இங்கிலீஷ் எழுதப் படிக்கத் தெரியுமாகையால் தற்கால ஏற்பாடாய் மாதம் 8-ரூபாய் சம்பளத்தில் ஒரு ரைடர் வேலையில் உன்னை அமர்த்துகிறேன். என்ன சொல்லுகிறாய்?" என்றேன்.

இவ்வார்த்தைகள் உடனே அவனுக்கு மனவெழுச்சியை உண்டாக்கிவிட்டன. அவன் பிறகு என்னை நோக்கிக் கூறியதாவது.—"இராஜாங்கத்தாரிடம் மதிப்பு வாய்ந்த ஒரு பெரிய உத்தியோகஸ்தருடைய பிள்ளையாயிருந்து மாஸம் எட்டு ரூபாய் சம்பளத்திற்கா நான் வேலையில் அமருகிறது! சக்ரவர்த்தியின் சேனையில் ஒரு இலாகாவின் மேல் அதிகாரியா யிருக்க என்னை அதிகாரிகள் கேட்டுக்கொண்டதுண்டு." என்று சொல்லி இராஜாங்க அதிகாரிகளிடமிருந்து தனக்குக் கிடைத்த சில மதிப்பு வாய்ந்த கடிதங்களையும் எனக்கு எடுத்துக் காட்டினான். பிறகு "எவ்வளவு சம்பளம் கொடுத்தால் நீ ஒரு இராணுவ உத்தியோகத்தை ஏற்றுக்கொள்வாய்?" என்று வினவினேன். அதற்கு அவன் "மாஸமொன்றுக்குப் பதினாறாயிரம் கொடுத்தால் அவ்வித உத்தியோகம் எனக்குத் திருப்திகரமாயிருக்கும்" என்று பதிலளித்தான். இதிலிருந்து தற்செயலாய் இவனது ஒருவித உன்மாத நிலைமை கண்டு பிடிக்கப்பட்டது. "மாஸம் பதினாறாயிரம் சம்பளம் கிடைப்பது அஸாத்தியமாயிற்றே; இந்த வீண் பிரமையைவிட்டு உசிதமாகவும் கிரமமாகவும் கிடைக்கக்கூடிய உத்தியோகத்தைத் தேடிப் பிழைப்பது யுக்தம்" என்று நான் பல வேறு வழிகளில் அவனுக்கு உபதேசஞ் செய்தும், குறைந்த சம்பளத்திற்கு எவ்வேலையிலும் அமர முடியாதென்று பிடிவாதமாகக் கூறிவிட்டான்.

அவனது நோக்கத்திலிருந்து திருப்பி அவனைக் கட்டுப்படுத்த முடியாமல் அவன் போகிற வழியே விட்டுவிட நேர்ந்தது. அவனுடைய மனம் அவ்விதமான பைத்தியத் தன்மையினால் கோளாறடைந்திருந்தது. அதன் பிறகு பல ஸமயங்களில் அவனைப் பார்க்க நேரிட்டபோதெல்லாம் என்னால் கூடியவரையில் அவனுக்கு நல்ல யோசனைகளைச் சொல்லி போதிப்பதுண்டு; ஆனால் என் முயற்சி யொன்றும் பலிக்கவில்லை. சில நாட்களுக்கெல்லாம் அவன் இப்பட்டணத்தை விட்டுவிட்டு எங்கேயோ போய்விட்டான்.

3. முகம்மதிய வாலிபன் ஒருவன் மராமத் இலாகாவில் சித்திர லேகந வேலை கற்றுக்கொண்டு சில்லரை வேலைகளைச் செய்து வந்தான்... அவன் நல்ல புத்திசாலி; இவனுக்கு அப்போதைக்கப்போது சொற்ப நேரம் வெகு மந்தமாக உந்மாதவேகம் (fits of insanity) தோன்றுவதாக அறிவிக்கப்பட்டது. அவன் வெகு ஸாது; அநேகமாய் அவன் சொற்ப வரும்படியில் பிழைக்கவேண்டியவனாயிருந்தான். அவனுக்குக் காயமான வேலை கொடுக்கப்படவில்லை; வெகு நாட்களாக வேலை கற்றுக்கொள்ளும் ஸ்தாநத்திலேயே வைக்கப்பட்டிருந்தான். மனக் கவலையினால் அவன் மனோநோயுற்றான்.

ஒரு ஸமயம் அவனுக்கு உந்மாத வேகம் ஏற்பட்டது. அப்பொழுது தன்னிடமிருந்த க்ஷௌரக் கத்தியால் தன் தொண்டையை அறுத்துக்கொண்டான். தொண்டையெலும்பின் (hyoid) மேற் புறமாய் சிறிது பலமான அறுப்பு காயம் ஏற்பட்டதென்றாலும், தைவச் செயலாய் பெரிய இரக்தக் குழாய் ஏதும் தாக்கப்படவில்லை; ஆகவே ஜடிதியில் வைத்திய உதவியினால் அவன் அபாய நிலைமையிலிருந்து அப்பொழுது தப்பித்துக்கொண்டான். பிறகு அவனுக்கு இயற்கையான மன நிலைமை

யும் திரும்ப வந்துவிட்டது. தன் கழுத்தைத் தான் அறுத்துக்கொண்டதை நினைத்து நினைத்து, தொண்டையில் அறுபட்ட இடத்தை அடிக்கடியும் பரிசித்துப் பரிசித்து அவன் பச்சாத்தாபப்படுவான். இவனை அப்பால் அநேக ஸமயங்களில் நான் பார்த்ததுண்டு. இச்சம்பவத்திற்குப் பிறகு இவனுக்கு மனக்கோளாறு மீண்டும் நேரிடவில்லை.

4. கிராமவாஸி யொருவன் உந்மாதரோகத்திற்கு உட்பட்டான். அவன் கஞ்ஜாவுண்பது வழக்கம். அவனுடைய சுற்றத்தார் அவனை உந்மாத வைத்திய சாலைக்குக் கொண்டு வந்தார்கள். நாம் அவனை எந்தக் கேள்வி கேட்டபோதிலும், அவன் "அதோ எதிரே அந்த மூலையில் பார்! அந்த அடைக்கலாங்குருவி எவ்வளவு பளபளப்பாயிருக்கிறது! அது என்ன பொன்போல துலங்குகிறது பார்! அதோ பறந்தோடுகிறது! மறைந்து போய்விட்டதே!" என்று தான் கூறுவான். இவ்விதமான மனக்கோளாறும் மாயக்காட்சியும் இரண்டு மாஸங்கள் வரையில் அவனுக்கு இருந்துவந்தது. அவன் கஞ்ஜாவுபயோகத்தை முற்றிலும் ஒழித்த பிறகு இப்பொன் குருவிக்காட்சியும் அவன் தோற்றத்திலிருந்து அத்தறுதிபாய் ஒழிந்துவிட்டது. அப்பால் அவன் ஸ்ஹஜமாகப் பேசவும் கேள்விகளுக்குக் கிரமமாக பதில் சொல்லவும் தொடங்கினான். இரண்டு மாஸங்களில் பொற்குருவிக் காட்சி மறைந்ததேபன்றி, அவன் முற்றிலும் மனோவிகாரத்திலிருந்து விலக அப்பால் நான்கு மாஸங்களாயின. ஆக ஆறு மாஸங்களளவும் எங்களுடைய மேற்பார்வையில் வைத்திய சாலையிலேயே இருந்துவந்தான். அப்பால் எல்லாவிதத்திலும் அவன் சித்தஸ்வாதீனமடைந்து ஒழுங்கான நிலைமைக்கு வந்துவிடவே, அவனை வைத்தியசாலையிலிருந்து வீட்டுக்கு அனுப்பிவிட்டோம்.

5. ஒரு 18-வயது பிள்ளை; உயர்குலத்தைச் சேர்ந்தவன். அபினி, கஞ்ஜா,மத்யம் இவற்றைக் குடிக்கும் வழக்கம் அவனுக்குண்டு. இது அவனுக்கு அவன் தகப்பனிடமிருந்து ஸம்பந்தித்த துரப்யாஸமாகும். அவன் வெகு உக்கிரமான உன்மத்தனாக ஆய்விட்டான். ஆகவே உன்மத்த வைத்திய சாலைக்கு அவனைக்கொண்டு வந்து சேர்த்தார்கள். அவன் இருக்கும் அறையின் கதவுகளுடைய இரும்புக்கம்பிகளை வெகு கெட்டியாகப் பிடித்து எழும்பி நின்றுகொண்டு அழுதுப் புலம்புவான்; இடைவிடாது பெருத்த சப்தமிடுவான்; ஸாதாரண மனிதர் புதிதாக அவ்வறைக்கு அருகிற் சென்றுவிட்டால் அவனுடைய கூச்சலைக் கண்டு நடுநடுங்கிவிடுவார்கள். நான் அவனைப் பார்க்கப் போகும் போதெல்லாம் அவன் சிறிது அமைதியுடன் நிற்பான்; நான் திரும்பிப்போகும்போது என்னை அவன் மீண்டும் தன்னிடம் வரும்படி யழைப்பான். தன்னை அவிழ்த்து விடும்படி வேண்டுவான். அவன் கூப்பிடுவதற்குத் திரும்பிப் பாராமல் சென்றேனால், ஆத்திரத்துடன் அமளி செய்து தொண்டை கம்மிப் போகுமளவும் ஹோவென்று கத்துவான். மனதைக் கெடுக்கும் மயக்ககுணமுள்ள கஞ்ஜாமுதலிய சரக்குகளின் உபயோகம் பற்றறவே ஒழிக்கப்பட்ட இரண்டு மாஸங்கள் சென்றபின், அவன் ஆக்ரோசமெல்லாம் தணிந்து, மனவமைதியடைந்தான்; சாந்தமான குணங்களெல்லாம் கிரமமாய் ஏற்பட்டன. சுய புத்தியும், விவேகமுள்ள உணர்ச்சியும் பழையபடியேற்பட்டு அவன் சுக நிலைமையைப் பெற்றான்.

6. மதுபானம் செய்பவனென்று தீர்மானிக்கப்பட்ட ஒருவனுக்கு ஒரு புதுமையான சேஷ்டை ஏற்பட்டிருந்தது. அதாவது சொன்னதையே திரும்பத் திரும்ப அவன் சொல்லுவான். அவனுடன் சேர்ந்து மதுபானம் செய்யப் போகிறவர்களை அல்லது பானம் செய்வதற்காகத் தனக்கு உதவிசெய்பவர்களை மிகமிகப் புகழ்ந்து பே



சுவான். குடிவெறி தெளிந்திருக்கையில் கூட அவன் தான் பேசிய வார்த்தைகளை அநேகமுறை திருப்பிக் கூறுவான். இது பலமான உந்மாத ரோகமல்லவாயினும் மதிமயக்கங்கொண்ட இவன் சொற்ப அளவாகப் பித்துப் பிடித்தவனென்றே சொல்ல வேண்டும்.

7. யௌவநப் பிராயத்திலுள்ள மற்றொரு நபரைப்பற்றியும் நான் குறிப்பிட விரும்புகிறேன். அவன் அப்போதைக்கப்போது குடிப்பவனானாலும், தான் குடிப்பவனென்பதை பிறர் அறியக்கூடாதென்கிற கொள்கையுடன், தன் மதி மயக்கத்தை மறைக்க ஏதேதோ பிரயாஸப்படுவான். சரியானபடி விவேகத்துடன் நடந்துகொள்வதாக அநேக வகைகளில் பாவனை செய்வான். இவன் இந்த எண்ணத்துடன் ஏதோ சில வாக்கியங்களை அல்லது செய்யுட்களை வெகு ஸ்பஷ்டமாகக் கூறுவதாக பாவித்து உச்சரிப்பான். ஆனால் பல முறை தன் தேஹம் தெரியாமல் அவ்வாக்கியத்தை அல்லது செய்யுளையே திருப்பித்திருப்பி உச்சரிப்பான். அவனது வீட்டுச் சுற்றுப்புறங்களில் வெகு ஒழுங்காக நடப்பவன் போல, ஓடியோடி நெடுநேரம் உலாவுவான். மத்யபான மயக்கத்துடன், தான்வெகு சுறுசுறுப்பாக வேலை செய்வது போல மிகவும் நீண்ட கடிதங்களை யெழுதுவான். ஒருதடவை தன் நண்பர்களுக்குப் புதுவருஷ வாழ்த்துக்கடிதங்களை இந்த ஸ்திதியிலேயே எழுதத் தொடங்கினான். கார்டுகளின் முன்புறங்களில் ஒவ்வொருவருடைய பெயரை ஸம்போதகம் செய்து எழுதிவிட்டு, அவற்றின் பின்புறங்களிலெல்லாம் முன் புறத்தில் எழுதியவருக்கல்லாமல் வேறு நபர்களுடைய விலாஸங்களை எழுதிப்போட்டுவிட்டான். மீண்டும் ஒருவனுடைய விலாஸத்தையே எட்டுக் கார்டுகளின் மேல் எழுதி, ஒவ்வொரு கார்டுக்கும் அரை அரைஅணா வீதமும், சிலவற்றிற்கு ஒவ்வொரு அணா வீதமும் ஸ்டாம்புகளை ஒட்டிப் போட்டுவிட்டான். பிறகு இரண்டொரு நாட்களுக்கெல்லாம் கிரமமாக இவனது புத்தி சாதுர்யம் தன் நண்பர்களின் மூலமாய் வெட்ட வெளிச்சமாகத் தொடங்கியது.

---

## OUR CHILDREN'S DIET.

### நமது குழந்தைகளின் உணவு.

BY G. KANNUSAMI VAIDYAR.

முற்காலங்களில் சிசுக்களுக்கு ஓர் ஆண்டு நிரம்பும் வரையில் தாய்மார் முலைப்பாலூட்டி வருவர். பிறகு கஞ்சி, புழுங்கலரிசியன்னம் முதலிய ஸாதாரண உணவு கொடுக்கப்படுவது வழக்கம். அக்காலத்திய குழந்தைகள் அதற்கிணங்க நோயற்றவர்களாகவும், திடசரீரமுள்ளவராயும், ஆகவே தீர்க்காயுளராகவும் இருந்துவந்தார்கள். இக்காலத்தில் பிரஸவங்கூட நாகரிகமாய் நடைபெறவேண்டுமென்று சில புதிய வழக்கங்களை நமது ஸ்த்ரீகள் அவலம்பிக்கலானார்கள். பிரஸவித்தவுடனே, வயிறு புண்பட்டிருக்கையிலேயே காப்பி, டீ முதலிய பானங்களும், அன்னவகைகளும், ஏதோ சிறிது நாசுக்கான மருந்துகளும் உபயோகிக்கப் பட்டுவருகின்றன. ஒரு பணம் செலவில் எளிதில் தேஹசுகமுண்டுபண்ணக்கூடிய நமது பாரம்பரையில் நல்ல அனுபவத்தில் வந்த சுக்கு-காயம் முதலிய ஸாதாரண கூட்டு மருந்துகளின் உபயோகத்தையும் நிறுத்திவிட்டார்கள்.

இக்காலத்திய நாகரிக மருந்துகள் எனப்படும் சரக்குகளும் சிகிச்சையும் சிலருக்குப் பிடிக்காமல் ஜ்வரம், இரணஜன்னி, அஜீர்ணம் முதலிய பொது வியாதிகளும், ஸூதகரோகம் முதலிய கருப்பையைப்பற்றிய கோளாறுகளும் உண்டாகின்றன. வயிறு புண்பட்டிருக்கையில் ஆஹாரங்களைக் கொடுப்பதால் அவ்வுணவுகள் ஜீர்ணமாக முடியாமல், அஜீர்ணமும், அஜீர்ணபேதியும், உணவு ஜீர்ணமாகுங்கால் ஏற்படும் பரிணாம சூலை யென்கிற வயிற்

றுநோவும் ஆக இத்யாதி கெடுதிகள் ஸம்பவிப்பது ஸஹஜம். ஆகவே ஸ்த்ரீகள் இக்காலத்தில் (முக்கியமாய் நாகரிகம் வாய்ந்தவர் எனப்படும் ஸ்திரீகள்) பொதுவாக மெலிந்துபோய் தம் குழந்தைகளுக்குப் பாலூட்ட வகையில்லாதவராயிருக்கிறார்கள்.

காலை 5-மணிக்கெல்லாம் காப்பியையும் டீயையும் குடித்து தேஹத்தை இன்னும் கெடுத்துக்கொள்கிறார்கள். குழந்தைகளுக்கும் தக்க உணவுகள் கொடுப்பதில்லை. நமது பூர்வ வழக்கங்களை மறந்துவருகிறார்கள். ஏதேதோ கண்ணுக்குப் பகட்டாகத் தோன்றும் புட்டியிலடைத்த மாப்பண்டங்களை யெல்லாம் ஏராளமான விலைகொடுத்து வாங்கியுபயோகிக்கிறார்கள். இந்த மேனாட்டு வழக்கம் உணவிலுமா அநுஸரிக்கப் படவேண்டும்? நமது தேச நிலைமைக்கும் பழக்க வழக்கங்களுக்கும் இவையெல்லாம் எப்படி சரிப்படும்? நமது இயற்கைக்கு ஒவ்வாத உணவுகள் நமது குழந்தைகளின் வயிற்றுப் புளிப்பை அதிகரிக்கச்செய்கின்றன; வயிற்றுப்பொருமலும், சில குழந்தைகளுக்கு மாந்தக்கட்டி முதலிய பலமான வயிற்றைப்பற்றிய கோளாறுகளும் ஸம்பவிக்கின்றன.

சிலர் குழந்தைகளுக்குப் பால் கொடுப்பதையே நாகரீகக்குறைவாக மதிக்கிறார்கள். முலைப்பாலூட்டுவதையும், சிறந்த பசுப்பாலைப் புகட்டுவதையும் விட்டுவிட்ட பிறகு நமது தேசத்துக் குழந்தைகள் பல வகையிலும் அநாரோக்கியமான ஸ்திதியைப் பெற்றுவிட்டார்கள். மேற்படி ஸங்கடமான நிலைமைகளை நமக்கு நாமே உண்டுபண்ணிவருகிறோம். சரியான ஆஹாரங்களை உபயோகிக்காமையாலும், தினசரியாக விரேசந மருந்துகளை உபயோகிப்பதாலும் குழந்தைகளின் தேஹம் வளர்வதற்குப் பதிலாய் குன்றிவிடுகிறது. அவற்றின் கை-கால்கள் சுருக்கங்கொண்டு, வயிறு பருத்து மிகக் கேவலமான நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. இதற்கெல்லாம் காரணம் அறியாமையினால் நாம் பின்பற்றும் நவநாகரிக வாழ்க்கையென்கிற புதிய ஆசார விவஹாரங்களேயன்றி வேறல்ல.

அந்தந்த தேசத்திலுள்ள அநாதியான பழக்கவழக்கங்களை (முக்கியமாய் ஆஹார ஸம்பந்தமான ஆசாரங்களை) வேறுபடுத்திக் கொள்வது முறையல்ல; நாம் தெரியாமையினால் ஆசைப்படும் நூதன நாகரிகப் பழக்கங்களை நமது தேஹக்கருவிகளும் ஏற்றுக்கொள்ளுமென்று நினைப்பது விவேகமல்ல. நமது தேசத்துக் குழந்தைகளுக்கு (முக்கியமாய் ஏழெட்டு மாஸங்களுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு) ஏற்ற உணவுமுறை யொன்று அடியிற் குறிப்பிடப்படுகிறது:—

சுத்தமான புழுங்கலரிசியை அன்னமாகச் சமைக்கவும்; முக்கால் வாசி பக்குவமாகும்போது சிறிது அரிசியை அதில் கலந்து இரண்டொரு நிமிஷம் மூடி வைத்து கஞ்சியை வடித்து விடவும். அந்த அன்னத்தை வெயிலில் உலர்த்தி, இலகுவாக வறுத்தெடுத்து மாவாக அரைத்துக்கொள்ளவும். அதில் திட்டமாக உப்புத் தண்ணீர் சேர்த்துக் கலந்து புட்டு பாகமாகப் பக்குவம் செய்தெடுத்து, உலர்த்தி, மற்றொரு முறை அரைத்து நுண்ணிய பாவாக எடுத்துக்கொள்ளவும். இந்த மாவைத் தேவையானவளவு சேர்த்து கஞ்சி காய்ச்சி, குழந்தைகளின் வயது முதலியதற்கு ஏற்றவாறு பால் சேர்த்தோ சேர்க்காமலோ உபயோகிக்கலாம்.

---

## MENSTRUAL TROUBLES OF A FEMALE PATIENT.

## ஒரு ஸ்த்ரீயின் ஆர்த்தவக்கோளாறு.

BY DR A. NANJUNDA AIYAR, L. M. P.
*Sub-Asst. Surgeon.*

ஒரு ஸ்திரீ ரோகியின் தேஹநிலைமைகளைப் பற்றிய விவரமான வரலாறுகளை இதனடியில் நான் குறிப்பிடுகிறேன். அந்த அம்மாள் ஸூதகக் கோளாறால் வருந்திக் கொண்டிருக்கிறாள். தாங்கள் இப்பிணியாளியைப் பற்றிய எல்லா ஸங்கதிகளையும் கவனித்து, அப்பிணியாளியின் தேஹத்தில் எளிதில் ஏற்றுக்கொள்ளக்கூடிய சிறந்த ஔஷதத்தையும் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மேலும் இந்த வியாதிக்ரஸ்தைக்கு மஹா யோகராஜ குக்குலு (சார்ங்கதர ஸம்ஹிதை) ஏன் குணம் செய்யவில்லை யென்பதையும் அறிவிக்கக் கோருகிறேன்.

இப்பிணியாளிக்கு வயது 23. இவளுடைய தாய் தந்தை முதலிய பாரம்பரையைப் பற்றிய வரையில் இவ்வியாதிக்கு ஸம்பந்தப்பட்ட விசேஷ வரலாறு ஒன்றுமில்லை.

பிணியாளியின் முந்திய வரலாறு:—விவாஹமான பிறகு மூன்று வருஷகாலம் மாதவிடாய் சரியான நிலைமையிலேயே இருந்து வந்தது. இவளுக்கு 17-வது வயதில் ருதுசூலை (dysmenorrhoea) ஆரம்பமாயிற்று; ஆனால் ஆர்த்தவம் மாத்திரம் இயற்கையளவில் வெளியாய் வந்தது. 1912-இல் முதல் தடவை கர்ப்பஸ்ராவம் (abortion) ஏற்பட்டது; மறுபடி 1914 இல் இரண்டாந்தடவையும், கர்ப்பஸ்ராவம் ஸம்பவித்தது. பிறகு 1916-இல் ஒரு தடவை அகாலப்பிரஸ வேதனை ஏற்பட்டது; அது அதிக தொந்தரவுண்டுபண்ணியது; பிரஸவித்த சில நிமிஷங்களுக்கெல்லாம் சிசு இறந்து விட்டது. அது முதலாக மறுமுறை கர்ப்பம் தரிக்கவில்லை. ருதுகாலங்களில் சிறிது வலியேற்படுவதைத் தவிர்த்து மாதவிடாயில் வேறுவித ஏற்றக்குறைவு ஒன்றும் கிடையாது. அலெட்ரிஸ் கார்டியல் ரியோ என்கிற ஔஷதம் 1914-இல் ஆறு மாஸ காலம் உபயோகிக்கப்பட்டது. 1916-ம் வருஷத்திற்குப் பிறகு, அதாவது மூன்றுவது கர்ப்பத்திற்குப் பிறகு அவ்வம்மையின் சரீரம் மேன்மேலும் ஸ்தூலிக்கத் தொடங்கிற்று. 1919ம் ஸ்ரீ, ஜூன் மாஸத்தில் இந்தம்மாள் கடுமையான வாத-கபஜ்வரத்தினால் வருந்த நேரிட்டது; அந்த ஜ்வரத்திலேயே மாதவிடாயும் உண்டாயிற்று. இதன் பிறகு மூன்று நான்கு முறை இந்தம்மாள் சரியானபடியே வீட்டுக்கு வெளியிலிருந்தாள்; அப்பொழுதெல்லாம் வலி மாத்திரம் சொற்பம் இருந்ததே யன்றி வேறு விகாரம் ஏதும் கிடையாது.

1919 அக்டோபர்மாஸத்தில் ஸூதகம் (ஆர்த்தவம்) குறையத் தலைப்பட்டது; துடைகளில் ஈட்டியால் குத்துவதுபோன்ற கடுமையான வலியோடும், தீவ்ரமான இடுப்புவலியோடும் துன்பப்பட்டாள். அது (வலி) பகலில் வேலை செய்து வருகையில் மேன்மேலும் கடுந்துன்பம் விளைவிக்கும்; சிரம பரிஹாரம் செய்யும்போதும், தூங்கும்போதும் தணிவடையும். பக்கவாட்டுகளில் திரும்பக்கூட முடியாமல் இடுப்பு நோய் அவ்வளவு கடுமையாயிருந்தது. அப்பால் கூபக பரிசோதனையினால் வலியிருக்கும் பாகத்திற்கு நேராக அவ்விடத்திய அவயவம் விறைத்துப் போயிருப்பதாகத் தெரியவந்தது. இந்த நிலைமையில் இரத்தபோளம் கலந்த மூஷாம்பரம் கொடுக்கப்பட்டது. இதன் பிறகு மாதவிடாயாகும்போது நார்போன்ற ஒருவித சிலேஷ்மம் வெளியாயிற்று; அது ஆந்தரகலா ஸம்பந்தமான ஸூதக வலிக்கு ஒப்பிடக் கூடியதாயிருந்தது. பார்ச்வ பரிவர்த்தந சிகித்ஸையும் நிறைவேற்றப் பட்டது; இந்த சிகித்ஸை செய்யப்படுங்கால், கலைகளுக்கு உராய்விருப்பதாகச் சந்தேஹிக்கப்பட்ட விடத்தில் அக்கோளாறு களைவது செவ்வியுறப்பட்டது. இப்பரிவர்த்தந சிகித்ஸை செய்யப்பட்ட பிறகு நார்போன்ற சிலேஷ்மம் வெளியாய் வந்தது நின்று விட்டது; அந்தம்மாள் குணமடைந்து வந்தாள். சிறுநீர் ஸம்பந்தமான கோளாறுகளும் நிவாரணமாயின. (இதற்கு முன்பு ஜலம் சொற்ப அளவே இறங்கிக் கொண்டிருந்தது).

அப்பால் 1920 ஸ்ரீ ஜூன் மீ இல் மஹா யோகராஜ குக்குலு ராஸ்நாதி க்வாதத்துடன் உபயோகிக்கப்பட்டது; ஆனால் அதை அநுஸரித்து குணமொன்றும் காணப்படவில்லை.

ன் பிறகு டிசம்பரில் அயஸம்பந்தமான றுநோய ஔஷதம் சில நாள் கொடுக்கப்பட்டது. பது ஏப்பொழுது கர்ப்பாசயத்தின் மெல் மர்த்தந தில் (கித்ஸையும் செய்யப்பட்டது. பிறகு 1921- படும் னவரியில் சிறிது இரக்தப் பெருக்கும், அதற் தம் (டுத்தாற்போல பந்தன் கெட்ட நிணநீர்ப்பெரு லாத க்கும் ஏற்பட்டது.

குறிப்பு:—1919௵ ஏப்ரல்௴ இல் ஸர்ப்ப முக சஸ்திரத்தினால் (Curette) கர்ப்பாசயத்தில் சஸ்திர சிகித்ஸை செய்யப்பட்டது. கர்ப்பாசயப பின் புறப் புறட்சியை நிவாரணம் செய்யவும் (அந்தர்முக யோனி) அதைத் தொடர்ந்தேற்பட்ட கர்ப்பாசயத்தில் ஆந்த ராவரண கலையின் தாபநத்திற்காகவும் இச்சிகித்ஸை செய்யப்பட்து.

தற்கால நிலைமை:—(1) மாதவிடாய் முற்றிலும் நின்று விட்டது. (2) கர்ப்பாசயத்தின் பச்சாத்பாக பரிவர்த்தநம். ( ) மேதோவ்ருத்தி (அதிஸ்த்தௌல்யம்).

மேலே குறிப்பிட்ட பிணியாளி எனது நண்பரான மற்றொரு வைத்தியருடைய பார்வை. முடியுமானால் இவ்விஷயத்தை வைத்திய கலாநிதியில் வெளியிட்டு, இதற்கு ஏற்ற ஔஷதங்கள் இருந்தால் அவற்றையும் அவற்றின் குணங்களையும் தயவு செய்து வெளியிடக் கோருகிறேன்.

[யோகராஜ குக்குலு எவ்வளவு காலம் தொடர்ந்து உபயோகிக்கப்பட்டதென்பது குறிப்பிடப்படவில்லை. யோகராஜ குக்குலுவை தசமூலக்வ தத்துடனாவது ஏசமூலாரிஷ்டத்தோடாவது உபயோகித்தல் இவ்வியாதிக்கு ஏற்றதாகுமென்பது நமது கொள்கை. பலாதைலத்தை கர்ப்பாசயத்தின் மேலும், இடுப்பில் மற்றப் புறங்களிலும் தினந்தோறும் நன்றாகத் தேய்த்து ஏதேனும் ஸவ்ஷம ஸ்வேதம் செய்து வரலாம். பலக்ருதத்தை இப்பிணியில் பிரயோகிப்பது நலம் வியாதி நீடித்ததாகவும், உபத்திரவங்களோடு கூடியதாகவும் தோன்றுவதால் மேற்கூறிய ஔஷதங்களை இடைவிடாமல் சில காலம் உபயோகித்து வரவேண்டியது அவசியம். அலடரிஸ் கார்டிடல் என்கிற மருந்தை ஆறுமாஸ காலம் உபயோகித்தும், அதனால் குணம் ஏற்பட்டதாகத் தாங்கள் கூறவில்லை குறிப்பிடக்கூடிய சிறந்த பலன் எதிர்த்து கொள்ளாமலே அவ்வளவு நீண்ட காலம் அம்மருந்தை உபயோகிக்கப் பொறுமையு விசுவாஸமும இருந்தது வியக்கத்தக்கதே. அவ்விதமே ஆயுர்வேத ஔஷதங்களையும் முறைப்படி சில மாஸங்களாவது உபயோகித்துப் பார்க்கக் கூடாதா? ப-ர்.]

# INJURIOUS EFFECTS OF ANGER.

## கோபத்தினால் விளையும் தீவினைகள்.

By Dr. W. KRISHNASWAMI RAO
*Ritired Hospital Assistant.*

ஒருவன் தீர்க்காயுளாக ஸுகித்து வாழவேண்டுமென்று எண்ணினால், அவன், தனது மனவெழுச்சியை அடக்கியாள முதலிற் கற்றுக்கொள்ள வேண்டும்; கோபவெழுச்சியை உண்டாக்குவதற்கு ஆஸ்பதமான முகாந்தரங்களை யெல்லாம் விலக்கவும் தெரிந்துகொள்ள வேண்டும். கோபம் பிராணாபாயகரமான நிலைமைகளையும் உண்டாக்கியதற்கு அநேகம் திருஷ்டாந்தங்களைக் கூறலாம். "நீரோ என்கிற சக்ரவர்த்தி, தனது மந்த்ரி ஒருவரால் அவமதிக்கப்பட, அதன் காரணமாக அவ்வரசன் அடங்காக் கோபங்கொண்டு விட்டான்; அக்கடுங்கோபத்தின் எழுச்சியானது அவ்வரசன் இறக்கும்படியான கொதிப்பை அவனது மூளைக்கு உண்டுபண்ணி விட்டது," என்று ஒரு கவி எழுதுகிறார். ரோமாபுரியின் முதல் சக்கிரவர்த்தியான வாலெண்டினியன் என்பவன் ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த குவாடி என்கிற ஜனங்களுடைய இனத்தின் பிரதிநிதிகளால் இழிவான வார்த்தைகளால் அவமானப்படுத்தப்பட்டதன் மேல், அச்சக்கிரவர்த்திக்கு அடங்காத கோபம் உண்டாய், அதனால் சிரஸ்ஸின் இரத்தக்குழாய் வெடித்து, உடனே திடீரென்று தரையில் விழுந்து இறந்தான் என்கிற கதையையும் பலர் படித்திருக்கலாம்.

டாக்டர் லாரோர்ஸர் என்பவர் கூறுகிறார்:- "நாடோடியான இரண்டு ஸ்த்ரீகளுக்கு ஒருவரோடொருவர் சச்சரவு உண்டாயிற்று; ஒருவரை யொருவர் மாற்றி மாற்றி திட்டிக் கொள்ள ஆரம்பித்தனர். வரவர கோபம் மிகவும் கடுமையாக இருவருக்கும் முற்றிப்போய் விட்டது. சற்று நேரத்திற் கெல்லாம் அக்கடுங்கோபத்தின் பயனாக இருவரும் தம்மை



யறியாமல் மயங்கி விழுந்து விட்டார்கள். ஒருத்தி கொறுக்கு வலிபோன்ற இசிவு கண்டு ஆறு மணி நேரத்தில் இறந்து போனாள். மற்றொருத்தி பிரஞ்ஞை யில்லாமலே விழுந்திருந்து இறுதியிலும் மூச்சுத்திணறி இரண்டு நாளில் உயிரிழந்தாள். இவ்விரண்டு பேரும் அழிந்ததையும் அவ்வழிவுக்குக் காரணம் அடங்காத கோபத்திற்குத் தம் மனதை உள்ளாக்கியதே யென்பதையும் நான் நேரில் கண்டு தெரிந்து கொண்டிருக்கிறேன். கோபத்தின் கொந்தளிப்பானது வெகு நெருக்கமான நிலைமைக்கு வந்து, மனம் துடி துடித்துப் பொங்கி யெழும்பிய பிறகும், அதனால் மரணம் ஒருவனுக்கு ஸம்பவிக்காமற் போயினும், பொதுவாக அக்கடுங் கோபமானது அவனது தேஹாரோக்கிய நிலைமையைப் பெரிதும் கலக்கி விடுகிறது."

கோபமானது பசியை எங்ஙனம் பங்கப்படுத்துகிறதென்கிற விஷயம் அனைவருக்கும் தெரிந்ததே. போஜனம் செய்ய உட்கார்ந்திருக்கையில் ஒரு மனிதனுக்குச் சண்டை நேரிடுவதாக வைத்துக் கொள்வோம். (ஏன், பலர் இதை அனுபவத்திலேயே பார்த்திருக்கலாம்.) அப்பொழுது என்னகிறது! அவனுக்கு இலையில் உட்காரும்போது உணவில் இருந்த அவ்வளவு விருப்பமும் பசியும் ஒரு நொடிப்பொழுதில் பறந்து போகின்றன. ஆரோக்கிய நிலைமைக்கு இன்றியமையாத சிறந்த பசியையும், உணவிலுள்ள விருப்பத்தையும் ஒரு நொடியில் அலங்கோலமாக அழியச் செய்வதினால் கோபத்திற்குச் சமானமான கொடிய வியாதி வேறொன்றும் கிடையாது. பித்தப் பிரகோபமுள்ளவன் அநேகமாய் அஜீர்ண வியாதிக்கு அடிக்கடியும் உட்படுவது வழக்கம்; அவனுக்கு அவ்விதம் பித்தம் பிரகோபமடைவதும் அஜீர்ண நிலைமை யேற்படுவதும் அவன் மிகுந்த கோபிஷ்டனா யிருப்பதினாலேயே யென்று சில வைத்திய சாஸ்திர நிபுணர்கள் கூறியிருக்கின்றனர்.

மிகச் கடுமையான கோபவெழுச்சியில் அடுத்தாற்போல் கொறுக்கு வலி ஸாதாரணமாய் ஏற்படக்கூடும். போஜனம் செய்தவுடனே ஒருவன் கோபத்திற்குள்ளானால், ஜீர்ணவேலை பெரும்பாலும் நின்று விடுமாகையாலும், பிறகு மீண்டும் அவ்வேலை ஆரம்பமானாலும் அது வெகு மந்தமாகவேதான் நடைபெறுமாகையாலும் அவனுக்குப் பித்த விகாரங்கள் ஏற்பட்டு, அஜீர்ணபேதி வயிற்றுப் பொருமல் முதலிய கோளாறுகளும் காண்பது இயல்பு.

சிலருடைய கல்லீரலும் ஜீர்ணக் கருவிகளும் வெகு பலமானவையா யிருக்கக்கூடும். அவர்களுடைய அவ்வுறுப்புகள் தமது ஜீர்ண வேலையை எவ்வளவு தூரம் ஸமாளித்து வந்த போதிலும், கடுங்கோபமானது அவர்களுடைய ஜீர்ணக் கருவிகளுக்கு ஒரு சிறிதேனும் கோளாறை யுண்டாக்குவதிலும், அவர்களுடைய மூளையில் மிகுந்த தாபத்தை விருத்தி செய்து அவ்வவயவத்தின் சக்தியை அழிப்பதிலும் பின்னடைய மாட்டாது. பலஹீனமான இருதய முடையவருக்குக் கோபம் அவ்வவயவத்தை இன்னும் பலஹீனப்படுத்தி, அதன் மூலமாய் அவர்களுடைய ஆயுள் காலத்தையும் பெரிதும் குறைத்துவிடு மென்பதில் ஸந்தேஹமில்லை.

# வைத்திய கலாநிதி

ரௌத்ரி௵ தை, மாசி௴

## WHY PEOPLE ARE ILL?

## ஜனங்கள் ரோகிகளாவானேன்?

அறியாமையும், அஜாக்கிரதையுமே அளவற்ற அநாரோக்கியத் துன்பங்களுக்கும், எண்ணிறந்த மரணங்களுக்கும் முக்கியமான முகாந்தரங்களாகும். ஆகவே, அறிவுடையோர் ஆரோக்கிய மார்க்கங்களை அலக்ஷியம் செய்வதென்பது பாவச் செயல்களைச் சேர்ந்த குற்றமாகுமே யல்லாது, ஸாதாரணமான தவறுதலாகக் கருதப்பட மாட்டாது. நமது சரீரத்தின் இயற்கையான ஜடபௌதிக க்ரியைகளை ஆளுவதற்கான தத்துவங்கள் கடவுளால் படைக்கப்பட்ட அம்சங்களாம். ஆகையால் அந்த க்ரியா தத்துவங்களைக் கடவுளின் கட்டளைகளெனக் கருதவேண்டும். இத்தத்துவங்களைப் புறக்கணிப்பதானது கடவுளின் கட்டளைகளை மீறிய குற்றமாகும். இத்தத்துவங்களை மீறி நடப்பவர் (அவ்விதம் மீறுவது புத்தி பூர்வகமானாலும் அறியாமையினாலானாலும் சரி) வியாதிக்கு உள்ளாகிறார்கள். ஆகவே கடவுளின் கட்டளையை மீறி நடப்பவர்களுக்கு வியாதிகள் தண்டனையாக ஏற்படுவதாகக் கூறவேண்டும்.

திடீரென்று நேரும் ஆகந்துகமான சில அபாயங்கள், வெகு சொற்பமான வேறு சில தற்செயலான கோளாறுகள் இவற்றைத் தவிர, வியாதிகள் நம்மால் வரவழைக்கப்பட்டாலேயொழிய நமதிடம் பற்றுவதற்கு மார்க்கமில்லை. வியாதி யுண்டாவதற்கு இரண்டு முகாந்தரங்கள் எப்பொழுதும் தயாராயிருந்து வருகின்றன; அவற்றுள் ஒன்று மூலகாரணம் எனப்படும்; மற்றொன்று ஸஹகாரி காரணமாம். பொதுவான ஒரு விதி யேற்படுத்துவோமானால், இவ்விரண்டில் ஏதேனும் ஒன்று மாத்திரம் தனக்குத்தானே வியாதியை விளைவிப்பதற்குப் போதியதல்ல வென்றே நிச்சயமாகக் கூறலாம். திருஷ்டாந்தமாக, வாயுவும் நம்மைச் சுற்றியுள்ள மற்ற எல்லா வஸ்துவும் பலவிதமான நுண்ணுயிர்களால் வியாபிக்கப்பட்டு அசுத்தம் நிரம்பியவையாகவே இருக்கின்றன; அங்ஙனமிருந்தும், இந்த அசுத்தமான வஸ்துக்கள் (நுண்ணுயிர்கள்) நம்மைத் தாக்கமுடியாதபடி நமது தேஹத்தில் இயற்கையான தற்காப்பு ஸாதநங்கள் அவ்வளவு அற்புதமாய் அமைந்திருக்கின்றன; ஆனால் உட்புற சக்திகளோ (வாதாதி தாதுக்கள்), வெளிப்புற நிதானங்களோ (ஆகந்துக காரணங்கள்) நமக்கு ஏற்பட்டுள்ள இயற்கையான தற்காப்புச் சக்தியைக் குறைத்தால், இந்த நுண்ணுயிர்கள் நமக்குக் கெடுதி செய்ய ஆரம்பிக்கும். க்ஷயரோகத்திற்கு மூலகாரணமான கிருமிகள் மிகவும் ஸாதாரணமாய் எங்கும் பரவியிருக்கின்றன; ஆகிலும், அவற்றின் அளவுக்குத் தகுந்த வளவாக க்ஷயரோகத்தினால் ஜனங்கள் கஷ்டப்படுகிறார்களென்று சொல்ல முடியாது. தேஹத்திலும் முக்கியமாக ச்வாஸாசயங்களிலும் ஈர்ப்பு தாக்கி ஜலதோஷத்தையும் சைத்தியத்தையும் விருத்தி செய்வதாலும், ஏக்காரணத்தினாலாவது தேஹபலம் குறைவதாலும், அங்ஙனமே நரம்புத்தளர்ச்சி யேற்பட்டு வாததோஷம் அதிகரிப்பதாலும் க்ஷயரோகக் கிருமிகள் தேஹத்தில் பற்றுவதற்குப் போதிய ஸௌகர்யம் ஏற்படுகிறது. இந்த நுண்ணுயிர்கள் க்ஷயரோகத்திற்கு மூலகாரணமாகவும், ஜலதோஷம் அல்லது சைத்தியம் முதலியது ஸஹகாரி காரணமாகவும் ஆகின்றன. அதாவது ஈர்ப்பு, நரம்புத்தளர்ச்சி முதலியவை வியாதிகளிடமிருந்து தப்புவதற்கான தற்காப்புச் சக்தியை குறைக்கவே, நம்மைச் சூழ்ந்து எங்கும் வியாபித்துள்ள க்ஷயரோகக் கிருமிகள் முதலியவை நமது தேஹத்தில் இடம் பெற்று சரீர தாதுக்களைத் தாக்க முயலுகின்றன. வியாதியின் மூலகாரணங்களை முற்றிலும் அழிப்பதற்கான உபாயங்களை எதிர்பார்ப்பது அஸாத்தியமான



விஷயம்; ஆனால் நமது தேஹத்திற்கு இயற்கையில் அமைந்துள்ள தற்காப்புச் சக்தி சிறிதும் தளர்ச்சி யடையாமல் அதை முழுதும் பாதுகாத்து, ஸஹகாரி காரணங்களின் நிகழ்ச்சியைத் தடுத்துப் போடுவது நமக்கு ஸாத்தியமான காரியம்.

வியாதி தேஹத்தை ஆக்கிரமிக்காதபடி தேஹத்திற்கு அமைந்துள்ள இத்தற்காப்புச் சக்தி யென்னும் ஸத்வத்தைக் காக்கும் வேலையைச் சுருக்கமாக 'வியாதி விலக்கு' எனக் கூறலாம். தற்காப்புச் சக்தி ஒவ்வொருவருக்கும் இவ்வளவுதான் இருக்குமென்று ஒரு பரிமாணம் கூறமுடியாது; அது வெளிப்புற உட்புற நிலைமைகளுக் கேற்றபடி அந்தந்த ஸமயந்தோறும் வித்தியாஸப்படும். வியாதி விலக்குக்கான தற்காப்புச் சக்தியைக் குறைப்பதற்குக் காரணமான அவ்வெளிப்புற நிலைமைகளாவன:— ஈர்ப்பு அல்லது சில்லிட்ட காற்று தேஹத்தைத் தாக்குவது, போதியவளவு பரிசுத்தமான வாயு இன்மை, ஓய்வின்மை, தகாத உடை, வியாயாமக் குறைவு, கிலேசம் முதலியன. உட்புற நிலைமைகளோ வென்றால்-தகாத உணவுகள்—அளவிற் குறைந்து அல்லது அதிகமான ஆஹாரம்-மாம்ஸ போஜனம், மதுபானம், புகையிலையுபயோகம், ஸந்துக்ஷணம் அல்லது உத்தீபந காரியான வஸ்துக்கள், அழற்சியுண்டாக்கும் பொருட்கள் இவற்றின் உபயோகம், போதியவளவு தண்ணீர் பருகாமை, அவசியமான வளவு சாகவர்க்கங்களைப் புஜிக்காமற் போவது, மனோ வேதனை முதலியனவாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக எவ்விஷயத்திலும் அமிதம் என்பதைப் பரிஹரிக்க வேண்டும்; அமிதபோஜனம், அமித பானம், அமிதமாக விஷயங்களில் பிரவ்ருத்தி என்பவை இக்காலத்தில் வெகு ஸாதாரணமானவை. இவ்வமிதச் செயலென்னும் பாவத்திற்குப் பலனும் போதியவளவு அத்தகையோருக்குக் கிடைத்துத்தான் வருகிறது. உண்மையாகவும் ஆடம்பரமின்றியும் ஆரோக்கியமாகவும் வாழ விரும்பினால் முற்குறிப்பிட்டவை முதலிய தீய குணமுள்ள வஸ்துக்களையும் விஷயங்களையும் விலக்கவேண்டும்; நல்ல வஸ்துக்களையும் விஷயங்களையும் மிதமாக உபயோகிக்க வேண்டும். நாம் களிப்புடன் வாழ்வதற்கு இவைதான் முக்கிய ஸாதநங்களாம்.

மனதை அடக்கியாளுவோரே மிதபோஜன முதலியதில் வெகு கவனத்துடன் இருந்து வருவார்கள். விநாடி தோறும் மூளையில் நடந்தேறும் வெகு ஸூக்ஷ்மமான எண்ணிறந்த சலந வேலைகளை அடக்குவதற்கு ஒவ்வொரு மனிதனும் வல்லவனாயிருப்பனென்று சொல்ல முடியாது. மனதை (மூளையின் வேலையை) மிதமாகச் செய்து கொள்ளும் சக்தியுடையவனே தேஹத்தின் வெளிப்புற அவயவங்களையும் இந்த்ரியங்களையும் அடக்கியாளும் திறமையுடையவனாவான். மிதம் என்கிற விஷயத்தைப்பற்றி "குட் ஹெல்த்" என்னும் சுகாதாரப்பத்திரிகை சென்ற டிசம்பர் ஸஞ்சிகையில் பின்வருமாறு கூறுகிறது:—"மனதானது சரீரத்தின்மேல் அபாரமாகத் தனது செல்வாக்கைப் பிரயோகித்து வருகிறது. தமநிகள், ஸிரைகள் (arteries and veins), மற்றுமுள்ள அவயவங்கள் எல்லாம் நாடிகளால் (nerves) ஆளப்பட்டு வருகின்றன; ஆகவே நாடி மண்டலத்தில் ஏதாவது ஒரு மாறுதல் ஏற்பட்டால், அம்மாறுதல் தேஹ முழுமையும் தாக்கக்கூடியதாகிறது. நாகரிகமாக வாழ்கிறோமென்று கூறிக்கொள்கிற இக்காலத்தில் ஜனங்களுக்கு நாடி மண்டலம் ஸம்பந்தமாய் ஏற்படும் கோளாறுகளைப் போல முற்காலத்தில் எப்பொழுதுமே உண்டாயிருந்ததாகத் தெரியவில்லை. இக்காலத்தில் வியாதிகளால் வருந்துகிற மனிதரில் பத்தில் ஒன்பது பெயருக்கு வியாதியின் காரணம் மனதைப்பற்றியதாகவே இருக்கிறது. இதற்குக் காரணமென்ன? இக்காலத்திய செயற்கையான ஜீவனமுறையும், வெகு

விநோதமான நவீன நாகரிகத்தின் நெருக்கடியான நிலைமையும் ஆக இவையே இதற்கு மூல காரணங்களாகின்றன ஆனால் அநேக ஸமயங்களில் சிலர் தமது தேஹக்கோளாறுகளுக்கு நரம்பு மண்டலத் தளர்ச்சியே காரணமென்று பிரமித்துக் கூறுகிறார்கள்; அவ்விதம் நரம்பு மண்டலம் குழப்பமுறுவதற்கு அல்லது தளர்ச்சி யுறுவதற்கு ஆதிகாரணம் என்னென்று மாத்திரம் தெரிந்து கொள்ளாமல், காரணத்தை விட்டுக் காரியத்திற்கு சிகித்சை செய்வது வழக்கம். நரம்புமண்டலக் கோளாறுக்கு மனத்தொல்லையோ, மனநோயோ, அல்லது அந்தரங்கமான வேறு சில தொந்தரவுகளோ எவையாயிருந்தபோதிலும் அவை ஜீவசக்தியை அழித்துவிடும்; இவ்விதம் அழிக்கப்பட்டு வருகையில், இதன் மூலகாரணம் முற்றிலும், விலக்கப்பட்டாலே யொழிய குணம் காண்பது அஸாத்தியம்."

வியாதிக்ரஸ்தர்களாய் விட்டு, ஆயிரக்கணக்காய் இறந்துவிடும் ஜனங்களில் பலரும் தகுந்த விவேகிகளா யிருந்தால் இன்றைக்கும் பிழைத்திருக்கக் கூடும். அவர்களுக்கு தீரத் தன்மையும் விவேக பலமும் இல்லை யென்றே கூறவேண்டும்; ஆகவே அவர்கள் தமது பிரமையாலும், அவிவேகத்தினால் தமக்குத்தாமே கற்பித்துக் கொண்ட மாயத்தோற்றத்தினாலும் ஏற்படுத்திக் கொண்ட வியாதியென்னும் மாயக்கோளாறுக்குத் தம்மையே இரையாகச் செய்து கொள்கிறார்கள். இத்துன்பங்களைச் சுயமாய் வரவழைத்துக் கொள்வதாக நாம் கூறினால் அது பலருக்கும் விச்வாஸமுண்டு பண்ணுவதாயிராது. "ஸாத்தியமான வரையில் ஒவ்வொருவனும் தனது தினசரி ஆஹாராதிகளில் பகுத்தறிவுடன் நடந்து கொள்ளட்டும்; பேராசையையும் பொறாமையையும் ஒழித்து மனக்கவலையின்றி மகிழ்ச்சியுடன் வாழட்டும்; எதிலும் அற்ப விஷயத்தில் எப்பொழுதும் புத்தியைச் செலுத்தாமலிருப்பாராக; நக்ஷத்திரம் நிரம்பிய அகண்ட ஆகாயத்தையும், புஷ்பங்கள் அடர்ந்த வனங்களையும், மஹோன்னதமான பர்வதங்களையும், அகாதமான கடல்களையும், மற்றுமுள்ள விசித்திரமான ஸ்ருஷ்டிகளையும் உற்று நோக்கி அவற்றினின்றும் கடவுளின் அபார சக்தியையும், உலகின் இயற்கையான அற்புதக் காட்சியையும் கண்டு ஆச்சரியமும் அகமகிழ்ச்சியும் அடைவாராக. இவ்விதம் முழுமனதுடன் தியானித்து வருகையிலேயே உங்களுடைய உடலிலிருந்து நோவுகளும் துன்பங்களும் மாயமாகப் போய்விட்டதாகவும் அறிவீர்கள்; உங்களுடைய ஆரோக்கிய நிலைமை ஒருபடி உயர்ந்ததாகவும் கருதுவீர்கள்." நமது பெரியோர் "மனம்போல வாழ்வு" என மொழிவதுண்டு; இடைவிடாமல் விசாலமும் கம்பீரமும் உண்மையுமான மார்க்கங்களில் மனதைச் செலுத்தச் செலுத்த நமது சாரீர-மானஸிக ஸுகங்களும், லௌகிக-பாரமார்த்திக வாழ்க்கைகளும் இனிது நடைபெறும்.

---

## BREATH AND BE WARM..

### முறைப்படி மூச்சு விட்டு உடலின் உஷ்ணத்தைக் காப்பாற்றிக் கொள்க

ச்வாஸவேலையில் நாம் எவ்வளவு முக்கியமாகக் கவனம் செலுத்தவேண்டுமென்பதைப் பற்றி இச்சிறு நிரூபம் வரையப்படுகிறது அதிலும் ஜலதோஷத்தினால் பீடிக்கப்படுபவருக்கு முறை தவறாத ச்வாஸம் இன்றியமையாததென்பதை நமது நேயர்களுக்குத் தெரிவிப்பதற்காக டாக்டர் ஸி.ஜே.ஹில் எய்ட்கென் என்பவர் "லான்ஸெட்" என்கிற வைத்தியப் பத்திரிகையில் வெளியிட்டுள்ள கடிதத்தின் ஸாராம்சத்தை நாம் இங்கு எடுத்துக் கூறுகிறோம். அவர் கூறுவதாவது:—



"சென்ற குளிர் காலத்தில், ஒரு மனிதனைக் கண்டு, அவனிடம் ஒரு விசேஷமான செய்தியைத் தெரிந்து கொண்டேன். குளிரை நினைத்தால், தான் மிகவும் அஞ்சி நடுங்குவதாக அவன் என்னிடம் கூறினான். வெளியில் போகும் போதெல்லாம் வேளைக்கு ஒரு ஜதையாக வெகு கனமான அநேகம் பூட்ஸுகளை அவன் அணிந்து வந்தான். மிகவும் கனமான காலுறைகளை வீட்டிலிருக்கும் போதுகூட போட்டுக்கொண்டிருப்பான்; காலுறைகளுக்குள் உள்ளங்காலுக்கு அடியில் கனமான காகித அட்டைகளையும் அமைத்திருப்பான். ஈரமான பூட்ஸுகளும் காலுறைகளும் அவனுக்கு மிகவும் பயங்கரமான வஸ்துக்களாம். தனது தேஹத்தில் இரத்தவோட்டம் வெகு கெட்டிருப்பதாகவும், ஆகவே தான் ஆரோக்கியக் குறைவாயிருப்பதாகவும் அவன் சொன்னான். தற்செயலாய் அவனுடைய நாசியை நான் கவனிக்க நேரிட்டது. அவனது நாசியறைகளின் மத்திய வெலும்பு இடது புறமாகச் சாய்ந்து வளைவுற்றிருந்தது. சஸ்திர சிகித்சை செய்து, அக்கோளாறைச் சரிப்படுத்துவதாக நான் கூறியும், அவன் சஸ்திர சிகித்சை செய்துகொள்ள இசையவில்லை. அவனது நாசி யறைகளின் பக்கச் சுவறுகள் அசைவற்றிருந்ததையும் கவனித்துப் பார்த்தேன். வாயால் மூச்சுவிடும் வழக்கத்தை விட்டு விட்டு, நாசியினாலேயே ச்வஸிக்கவேண்டுமென்றும், அவ்விதம் செய்ய இடைவிடாது அப்பியாஸம் செய்யவேண்டுமென்றும் அவனுக்கு நான் வற்புறுத்தித் தெரிவித்தேன். அவ்விதமே அவன் செய்து வந்ததில் ஒரு வாரத்திலேயே பலமான முயற்சியின்றி நாசி மூலமாய் ச்வாஸவேலை தனக்குத்தானே எளிதில் நடைபெறுவதாயிற்று. பிறகு அவனை நான் கண்டபோது வியாதி நிலைமையிலிருந்து நீங்கி தான் பலம் பெற்றுவிட்டதாக அதிக ஆவேசத்துடன் என்னிடம் மொழிந்தான். அதன் பிறகு பிரதி தினமும் ஒரு ஜதை பூட்ஸையே (மாற்றாமல்) இனி உபயோகித்துவர முடியுமென்று மிக்க ஆச்சரியத்துடன் கூறினான். குளிர் மிகுதியாயிருந்த தினத்தில்கூட, இப்பொழுது நன்கு சிறந்து ஸ்வாதீனம் பெற்றிருக்கிற நாசியின் மூலமாக உட்செல்லும் வாயுவானது மிக்க உத்ஸாஹத்தை உண்டுபண்ணி, பாதங்களின் விரல்கள் வரையில் இரத்தவோட்டத்தை தாராளமாகச் செய்து, உயர்ந்த திராக்ஷாஸவத்தைப் (Champagne) போல மனதை வெகு களிப்புறச் செய்து வருகிறது என்றும் அவன் அடங்கா மகிழ்ச்சியுடன் மொழிந்தான். மிகவும் குளிருள்ள ஸமயமானது முன்னால் அதி பயங்கரமாக அவனுக்குத் தோற்றியிருக்க இப்பொழுது அது பல்ய ஔஷதம் (tonic) போல விசேஷ இன்பந்தருவதாக அவன் உணர்வதாகவும் அறிவித்தான். அவனுக்கு வழக்கமாயிருந்த நிலைமைகளில் ச்வாஸவேலையை நாசியினால் நிறைவேற்றும்படியாகச் செய்த ஒரு விஷயமே, அவனுக்கு இவ்வளவு விசேஷமான நன்மையைச் செய்து விட்டது. அவனது இடது நாசி த்வாரம் நன்கு திறந்து, ச்வாஸவேலை அதன் மூலமாய் நடந்தேறியது. இதனால் அவனுடைய ஸாதாரண வாழ்விலேயே ஒரு விசேஷ மாறுதல் ஏற்பட்டு விட்டதாக அவன் நன்கு தெரிந்துகொண்டதாக் கூறினான்."

ஆஸ்திகர்களான நண்பர்களே! நமது சாஸ்திரங்களில் முனிவர்களால் சாஸநமாக வரையப்பட்டுள்ள வைதிக விதிகளுக்கிணங்க, ஆரோக்கியமாக தீர்க்காயுளாய் வாழ இன்றியமையாச் சாதநமான ஒழுங்கான ச்வாஸவேலை யெனப்படும் பிராணாயாம முறையை விடியற்காலத்திலும், அந்திப்பொழுதிலும், மத்திய காலத்திலும் தினந்தோறும் நிறைவேற்றி வருவீர்களானால், நமது சாஸ்திர முறையை நாம் அனுஸரித்து வருபவராக ஆவதோடு, ஆரோக்கியமாக நமது தேஹத்

தையும் காப்பாற்றிக் கொண்டு இம்மையிலும் மறுமையிலும் இன்புறுவதற்குத் தடையில்லையென்பதை மேற்படி டாக்டருடைய வசனத்திலிருந்தாவது நம்புவீர்களாக.

---

## THE REPORT OF DR. KOMAN ON INDIGENOUS SYSTEMS OF MEDICINE.

### ஆயுர்வேதத்தைப்பற்றி டாக்டர் கோமன்.

ஆயுர்வேத வைத்தியாபி விருத்தியை விரும்பிய அநேகம் பேர், சுதேச ஔஷத பரிசீலனை விஷயமாக டாக்டர் கோமனுடைய ரிபோர்ட்டை எதிர் பார்த்துக் கொண்டிருந்தனர். அவ்விதம் எதிர் பார்த்தவரெல்லாம் இலவு காத்த கிளியின் கதிக்கு ஆளாவார்களென்பது நமக்கு முன்னமே தெரிந்ததுதான். ஆயுர்வேத-யூனானி முறைகளை வேருடன் களையவும், மேனாட்டு வைத்திய முறையென்ன வைத்திய வியாபாரமென்ன இவற்றைப் பலமாக வேரூன்றிவிடச் செய்யவும் இராஜாங்கத்தார் பலவிதமான தந்திரங்கள் செய்துவருகிறார்கள். அவ்விதம் செய்யும் பலமான தந்திரங்களுள் டாக்டர் கோமனை சுதேச ஔஷத பரிசீலனைக்காக நியமித்ததும் முக்கியமான தொன்றாகும். டாக்டர் கோமன் இப்பொழுது வெளியிட்டுள்ள யாதாஸ்தைப் பற்றி விமர்சம் செய்து மற்றொரு முறை விவரமாய் எழுதுவோம். டாக்டர் கோமன் ஆயுர்வேதயூனானி வைத்திய விஷயமாய் வெளியிடும் அபிப்ராயம் எத்தகையதா யிருக்கக் கூடுமென்று ஸாதாரண அறிவுள்ள எவருக்கும் தெரிந்திருக்கலாம். ஆங்கில வைத்திய வியாபாரம் இத்தேசத்தில் இன்னும் செழித் தோங்கவும் ஆங்கில வைத்திய முறையே இனி நமது தேசத்தோரால் வேதத்திற்கும் மேலாகக் கருதப்படும்படியும் டாக்டர் கோமன் யாதாஸ்து தயார் செய்திருக்கையில் ஆயுர்வேத முறையை அழிக்கும் எண்ணத்துடன் அவர் அதை இகழ்ந்து எழுதியிருக்கையில் ஸர்ஜன் ஜெனரலும் மற்ற இராஜாங்க அதிகாரிகளும் டாக்டர் கோமனைப் புகழ்ந்திருக்கிறார்களென்றால் இதிலென்ன வியப்பு?

ப்ரிடிஷ் பாரமகோபியா என்கிற ஆங்கில வாகடநூலில் ஆயுர்வேத முறைகளிருந்து முக்கியமான சிறந்த ஔஷதமுறைகளைச் சேர்த்துக் கொள்ளலாமா வென்று யோசனை சொல்லுவதற்காக டாக்டர் கோமன் இராஜாங்கத்தாரால் இப்பரிசீலனை வேலையில் நியமிக்கப்பட்டார் என்று ஏற்கனவே நமக்குத் தெரிந்தது தான்! இவர் இந்த வேலையை ஆரம்பித்தபோது சென்னையிலும் வெளியூர்களிலுமுள்ள ஆயுர்வேத வைத்திய சாலைகள் சிலவற்றைப் போய் பார்வை யிட்டார். அந்தந்த வைத்திய சாலையிலிருந்தும் சிற்சில முக்கியமான ஔஷத முறைகளை எழுதிக் கொண்டு போனார். அந்த ஸமயத்தில் வைத்தியரத்னம் (காலஞ் சென்ற) பண்டித டி. கோபாலா சார்லு மாத்திரம் நமக்கு ஒரு எச்சரிக்கை செய்தார். "ஆயுர்வேத முறையின் மேல் தோஷாரோபணம் செய்து அச்சாஸ்திரத்தையும் நமது தொழிலையும் தொலைப்பதற்கு டாக்டர் கோமன் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவரை நம்பவேண்டாம். நமது ஔஷதங்கள் விஷயமாக அவருக்கு நாம் தகவல் கொடுப்பதானது நமது கழுத்துக்கு நாமே சுருக்குப்போட்டுக் கொள்வதற்கு ஒப்பாகும்" என்பது ஸ்ரீமான் ஆசார்லு அவர்களின் அரிய உபதேசமாகும்.

ஸ்ரீ கன்னிகா பரமேச்வரீ ஆஸ்பத்திரியில் தமக்கு வேண்டிய தகவல்களைத் தெரிந்து கொள்வதற்காக நமதிடம் டாக்டர் கோமன் நாலைந்து முறை வந்தார். இவர் வரும்போதெல்லாம் பண்டித கோபாலா சார்லு அவர்களின் எச்சரிக்கை நமது காதுகளில் ரீங்காரம் செய்துகொண்டிருக்கும். ஆகவே ஆயுர்வேத வைத்திய முறையின் தத்துவங்களைப் பற்றி இந்த டாக்டரிடம் விசேஷமாக எதுவும் வெளியிட நாம் விருப்பமில்லாதவரா யிருந்தோம். "உங்களுடைய" உத்தேசமும் உங்களுடைய ரிபோர்டும் எப்படி யிருக்குமோ வென்று ஆயுர்வேத வைத்தியர்கள் பலர் ஸந்தேஹப்பட்டு கவலைப் படுகிறார்கள். மேலும் ஸமீபத்தில் சட்டஸபையில் ஒரு அங்கத்தினருடைய கேள்விக்கு கவர்ன்மெண்டு தரப்பில் விடையளித்தபோது உங்களுடைய நியமனம் ஆயுர்வேதாபி விருத்திக்கு ஸம்பந்தப்பட்டதில்லை யென்று சொல்லப்பட்டதிலிருந்து எங்களுக் கெல்லாம் உங்களிடம் அவநம்பிக்கை யேற்பட்டிருக்கிறது" என்று நாம் டாக்டர் கோமனை வெளிப்படையாகக் கேட்டோம். அதற்கு அவர் அச்சமயம் அளித்த விடையின் தன்மையை நமது நேயர்கள் கவனிப்பாராக. அது பின்வருமாறு:-

"ஆயுர்வேத வைத்தியத்திற்கு இராஜாங்கத்தால் ஏதாவது நன்மை யேற்படுவதாயிருந்தால் அது என்னுடைய யாதாஸ்தின் மூலமாகத்தான் ஏற்படுமென்று உங்களுடைய ஸஹோதர வைத்தியர்களிடம் அறிவிக்கலாம். சட்ட ஸபையில் கனம் அங்கத்தினர் ஒருவர் இதற்குள் அவஸரப் பட்டுக் கொண்டு என் பரிசீலனை விஷயமாகக் கேள்வி கேட்டு விட்டார். கவர்ன்மெண்டு தரப்பிலும் ஏதோ ஒருவிதமாகப் பதிலளித்து விட்டார்கள். அதற்கு நான் என்ன செய்யலாம்?"

இப்பொழுது அவர் ஸர்க்காருக்கு ஸமர்ப்பித்திருக்கிற யதாஸ்தானது, அவர் எந்த அதிகாரிகளால் கௌரவிக்கப்பட்டு இவ்வேலையில் நியமிக்கப்பட்டாரோ அந்த அதிகாரிகளிடம் நன்றி பாராட்டுவதற்கேற்ப இயற்றப்பட்டிருப்பதாக நாம் பார்ப்பது ஒரு ஆச்சரியமல்ல. ப்ரிடிஷ் பார்மகோபியாவைப் பூர்த்தி செய்துகொள்ள இத்தேசத்திய ஔஷதச் சரக்குகளில் அவசியமானவற்றைத் தெரிந்து ரிபோர்டு செய்ய இவர் நியமிக்கப்பட்டதாக வியக்தமாக வெளியிட்டிருந்தால், இவரும் அவ்விதமே செய்திருந்தால், நாம் அதைப்பற்றியெல்லாம் விசேஷமாகக் குறை முன்வரப்போவதில்லை. ஆனால் ஆயுர்வேத வைத்திய முறையைப்பற்றி இவருடை அபிப்பிராயத்தை ஆராய்ச்சி மூலமாக வெளியிடச் சொல்லி இராஜாங்க அதிகாரிகள் இவரை நியமித்ததும், இவர் தமக்குத் தோன்றியவாறு அச்சாஸ்திரத்தைப்பற்றி அபிப்பிராயம் வெளியிடுவதும் ஆகிய இச்செயல்களே நமக்கு மிகவும் வருத்தத்தை உண்டு பண்ணுகின்றன.

டாக்டர் அனுபவமுள்ள நல்ல ஆங்கில வைத்தியர் என்று பிரஸித்தி யடைந்திருப்பது உண்மையே. ஆனால், அதனாலேயே ஆயுர்வேத வைத்தியத்திற்கு ஒருவித யோக்கியதாபத்திரம் அளிக்கவோ அதை இகழ்ந்து பேசவோ இவர் எப்படி அதிகாரியாவார் என்பது தான் நமது பிரச்னை. ஆயுர்வேதத்தின் தத்துவார்த்தங்களைப் படித்தறிய அவருக்கு ஸாத்தியமில்லையென்று நாம் சொல்லத்துணிவோம். அவருக்கு முதலாவது ஸம்ஸ்கிருதம் தெரியாது. ஸம்ஸ்கிருதத்திற் போதிய ப்யிற்சியிருந்தாலே யொழிய ஆயுர்வேத முறைகளைப் பற்றிய பரிபாஷைகளைக் கசடறத் தெரிந்து கொள்ள முடியாது. மேலும் எல்லா இந்திய ஆயுர்வேத மஹாமண்டலமென்ன எல்லா இந்திய ஆயுர்வேத வித்தியா பீடமென்ன இவைகளைப் போன்ற முக்கியமான ஆயுர்வேதஸங்கங்களின் அதிகாரிகளோடு கலந்து கொண்டு ஆயுர்வேதத்தைப் பற்றிய உபயோகங்களைத் தெரிந்து கொள்ளவும் இந்த டாக்டர் சிறிதும் முயற்சி செய்யவில்லை. அல்லாமலும் இவர் இது விஷயமாகப் பரிசீலனை செய்துவரும் போது கற்றறிந்த ஆயுர்வேத வைத்தியர் ஒருவரையும ஸந்தேஹமுள்ள விஷயங்களில் உதவி புரிவதற்காக வைத்துக் கொள்ளவுமில்லை. இவர் ஸர்ஜன் ஜெனரலுடைய அதிகாரத்துக்கு உட்பட்ட ஒரு இராஜாங்க ஸேவகர். இவ்வளவெல்லாம் போதிய முகாந்தரங்கள் இருக்கும்போது இவருடைய

யாதாஸ்து முற்றிலும் பக்ஷபாதமான தோரணையில் தயார்செய்யப்பட்டிருக்கிறதென்றால் [illegible] வியப்பேதுமில்லை.

த்ரிதோஷங்களின் ஸூக்ஷ்மார்த்தங்களையாவது, பஞ்ச நிதான ஸ்வரூபங்களையாவது, ஸ்நேஹ-ஸ்வேத-சோதந-ஸம்சமந-வஸ்தி-ரக்தமோக்ஷண-லேசநாதி சிகித்ஸாக்கிரமங்களின் தத்துவங்களையாவது, அஷ்டாங்க முறைகளின் விசேஷத்தையாவது, பொதுவாக ஸ்கந்தத்திரயத்தின் கோட்பாட்டையாவது டாக்டர் கோமன் தகுந்த சாஸ்திரஞ்ஞரிடம் படித்தறிந்தாரானால், அதிகார வர்க்கத்தைத் திருப்தியுறச் செய்வதைக் குறைவாக நினைக்கவும், தமது தாய் நாட்டினிடம் நன்றிபாராட்டி நமது சாஸ்திரக் கோட்பாடுகளை பலமாக நிலைநிறுத்தவும் யோக்கியதை யுள்ளவராக முன்வந்திருப்பார்.

மற்றொரு விஷயத்தைப் பற்றியும் நாம் கண்டிக்காமலிருக்க முடியாது. அதாவது:—ஆயுர்வேதத்தைத் தாழ்மைப்படுத்த இவருடைய யாதாஸ்தை மேல் அதிகாரிகள் ஓர் உபகரணமாக எடுத்துக் கொள்வதாகத் தெரியவருகிறது. இந்த யாதாஸ்தை ஆயிரக்கணக்கான பிரதிகளாக அச்சிட்டு, ஒவ்வொரு ஆங்கில வைத்திய உத்தியோகஸ்தருக்கும், லோகல் போர்டு முனிஸிபாலிடி இவற்றின் தலைமை அதிகாரிகள் ஒவ்வொருவருக்கும் வழங்கப் போகிறார்கள். ஆயுர்வேதத்தை அடியோடு தொலைப்பதற்கு இராஜாங்க அதிகாரிகள் கங்கணம் கட்டிக்கொண்டு பிரசாரவேலை செய்யப் போகிறார்கள். முதலில் டாக்டர் கோமனுக்கு இவ்வித யாதாஸ்து தயார் செய்வதற்காக ஏராளமான தொகை பிரதிப் பிரயோஜனமாகக் கொடுக்கப்பட்டது. பிறகு இந்த யாதாஸ்தை ஆயிரமாயிரமாய் அச்சிட்டு நாடெங்கும் வழங்குவதற்கும், விசேஷ திரவியம் செலவிடப்படுகிறது. நமது தேச ஜனங்களின் பணத்தையெடுத்து, நமது தேசத்துச் சாஸ்திரத்தையும் நமது தேசிய வைத்தியத்தொழிலையும் அழிப்பதற்குப் பார்க்கிறார்கள். நமது கைகளைக் கொண்டே நம் கண்களைக் குத்துவதற்கு நாம் உடன்பட்டிருக்கிறோமென்பதை நமது எதிரிகள் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். இராஜாங்க அதிகாரிகளின் இது ஸம்பந்தமான சூழ்ச்சிகளை வெட்ட வெளிச்சமாகச் செய்வதற்கும், ஆயுர்வேத முறை சாஸ்திரஞ்ஞரால் முற்றிலும் ஒப்புக் கொள்ளக்கூடியதென்று நிரூபிப்பதற்கும் நாம் எதிரிடையாக யாதாஸ்து தயார் செய்யவேண்டுமென்றாலும், அதை ஆயிரக்கணக்கான பிரதிகளாக அச்சிட்டு தேசமெங்கும் வழங்குவதென்றாலும் நாம் பணத்திற்கு எங்கே போவது? பொது ஜனங்களுடைய கஜானாப் பணத்திலிருந்து போதிய திரவியத்தைச் செலவு செய்ய எம்மைப் போன்றவருக்கும் ஸௌகர்யம் ஏற்பட்டிருக்குமானால், ஆயுர்வேத வைத்தியம் மேலாகவும், மேனாட்டு வைத்தியம் கீழாகவும் இருப்பதாக எடுத்துக் காட்டமுன்வருவோம். நமது சாஸ்திரத்தையும், தொழிலையும் கெடுக்க இராஜாங்கத்தார் நமது கஜானாப்பணத்தைச் செலவு செய்வது நியாயமல்ல.

---

## குடலிற் சென்ற கூர்மையான வஸ்துவை வெளிப்படுத்தல்.

உணவு முதலியவற்றோடோ, வேறு வகையிலோ ஏதேனும் கூர்மையான வஸ்து (ஊசி முதலியது) விழுங்கப்பட்டுப் போனால், வாந்தி செய்வித்து அதை வெளிப்படுத்த முயலக்கூடாது. வாந்தி செய்வித்தால், அவ்வஸ்து தொண்டையில் திரும்ப வந்து தாறுமாறாகப் பொத்திக் கொண்டுவிடக் கூடும். உருளைக் கிழங்கைச் சமைத்து, நன்றாகப் பிசைந்து, அதையே இரண்டு நாட்களுக்கு உணவாகக் கொடுத்துவரலாம். சிறிது ஆமணக்கெண்ணெய் கலந்த பாலையும் காலையிலோ இரவிலோ பருகக் கொடுக்கலாம்.



# CORRESPONDENCE.

## கடிதங்கள்.

### யோகராஜ குக்குலுவும் க்ருத்ரஸீவாதமும்.

வைத்தியகலாநிதி பத்திராதிபர் அவர்களுக்கு:—

ஐயா (1) சார்ங்கதர ஸம்ஹிதையில் கூறப்பட்டிருக்கிற யோகராஜ குக்குலுவை கால்களைப்பற்றி யுண்டாகும் பாராப்ளிஜியா (Paraplegia) என்கிற பக்ஷவாதத்தில் (இது ஆயுர்வேதத்தில் க்ருத்ரஸீவாதம் எனப்படும்-ப-ர்) உபயோகப்படுத்தலாமா? (2) அப்படியானால் எந்த அநுபானத்துடன் உபயோகிக்கலாம்? (3) பாராப்ளிஜியாவுக்கு) க்ருத்ரஸீவாதத்திற்கு) ஏற்ற ஔஷத முறையும், அதற்கு மேலே தேய்ப்பதற்கு உபயோகமான தைலமும், பத்திய வகையும் விவரமாய் எழுதப்பட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

ஏ. நஞ்ஜுண்ட ஐயர்,
அஸிஸ்டெண்டு ஸர்ஜன்

விடை:—(1) ஆம், அவ்விதமே உபயோகிக்கலாம். (2) ராஸ்நாதி க்வாதம் அநுபானம். மஹாராஸ்நாதி க்வாதத்தை யோகராஜ குக்குலுவுக்கு அநுபானமாகவும், அல்லது தனியாகவும் க்ருத்ரஸீவாதத்தில் உட்கொள்ள உபயோகிக்கலாம். (3) சார்ங்கதரத்திற் கூறியுள்ள இரண்டாவது தசமூல க்வாதத்தை உள்ளுக்கு இவ்வியாதியில் கொடுப்பது நலம். சதாவர்யாதி தைலத்தை தினத்திற்கு இரண்டு முறையாக மேலே தேய்த்து வரலாம். இரவில் படுக்கப் போகும்போது மஹாநிம்பஜடா கல்கத்தைக் கொண்டு மேலே பற்றுப் போடலாம். பரிசத்தில் குளிர்ச்சியானதை எதையும் இப்பிணியாளிக்கு உபயோகிக்கக் கூடாது. ரூக்ஷகுணமுள்ள (நெய்ப்பசையற்ற) வஸ்துக்களும் தகாதவை. பால், நெய், கனிவர்க்கங்கள், முட்டை முதலிய ஸ்நிக்த்தமான இதர வஸ்துக்கள் இவ்வியாதிக்கு அநுகூலமானவை. ப-ர்

---

### பக்ஷவாதம்.

வைத்திய கலாநிதி பத்திராதிபர் அவர்களுக்கு

ஐயா,

அடியிற்கண்ட வியாதிக்குத் தகுந்த பரிஹாரம் இன்னதென்று வைத்திய கலாநிதியின் மூலமாய் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தயவுசெய்து இவ்விஷயத்தைப் பிரசுரித்து விடையளிக்கக் கோருகிறேன்.

பக்ஷாகாத (பார்ச்வவாயு) வியாதியுள்ள ஒரு ரோகிக்கு சிகித்ஸை செய்து வருகிறேன். அவருக்கு வயது 27. மூன்று வருஷங்களுக்கு முன் பக்ஷவாதம் அவருக்கு ஏற்பட்டது. ஒரு காலில் கொஞ்சம் பரிசவுணர்ச்சி குறைந்திருக்கிறது. ஆனாலும் சரியாக நடக்கக் கூடிய சக்தி இருக்கிறது. ஒரு கைமட்டும் முக்கால் பாகம் பரிசவுணர்ச்சி யற்றதாயிருக்கிறது. கொஞ்சம் கஷ்டத்துடன் அக்கையை மேலுக்கு எடுக்கலாம். கை கால்கள் சூம்பலில்லாமல் சரியான ஸ்திதியிலேயே இருக்கின்றன. சுக ஸ்திதியிலிருக்கிற மனிதனுக்கு இருப்பது போலவே அவருடைய தேஹ நிலைமை காணப்படுகிறது. வியாதியுற்ற கால் கைகளுக்கு எதிர்ப்பக்கமாய் வாய் கொஞ்சம் கோணி முகவாதம் (அர்திதம் எனப்படும். ப-ர்) ஏற்பட்டிருக்கிறது. கண்களுக்கு யாதொரு கெடுதலுமில்லை. இந்த ரோகிக்கு ஞாபகசக்தியும் கொஞ்சம் குறைவாகத்தான் இருந்து வருகிறது. இந்த ரோகி என்னிடம் சிகித்ஸைக்கு வருவதற்கு முன்பே கை கால்களில் நெருப்பினால் சுடப்பட்டிருக்கிறது. என்னிடம் சிகித்ஸைக்கு வந்த பின்பு சுமார் ஒன்றரை மாஸமாக வாதாரிரஸம் (பாவ ப்ரகாசமுறை), ஏகாங்க வீரரஸம் (நிகண்டு ரத்நாகர முறை), மஹா யோகராஜ குக்குலு (சார்ங்கதர ஸம்ஹிதை முறை), மஹா ராஸ்நாதி கஷாயம், விஷகர்ப்ப தைலம் இவைகளை உபயோகிக்கச் செய்து வருகிறேன். ஆனால் குணம் தெரியவில்லை.

V. A. ஷேக் அப்துல் கதீர் ஸாஹேப்.

விடை:-முதலில் நாராயண தைலத்தினாலாவது தான்வந்தர தைலத்தினாலாவது தேஹ முழுமைக்கும் ஸ்நேஹ சிகித்ஸையைச் செய்யவும்; தசமூல க்வாதத்தைக் கொண்டு திரவஸ்வேதத்தை அப்பால் நிறைவேற்ற வேண்டும். மஹா ஸால்வண ஸ்வேதம் செய்விப்பதும் நலம். ஏதேனும் வாதஹர கஷாயத்தினால் வாரத்திற்கு ஒருமுறை நிரூஹ வஸ்தியையும், அடுத்தாற்போல சதாவரீ தைலம் முதலியதைக் கொண்டு சிறிது அநுவாஸந வஸ்தியையும் பிரயோகிக்க வேண்டும். முடியுமானால் சிரோவஸ்தியை அடிக்கடி பிரயோகிப்பதாலும் நல்ல பலனுண்டு. இரண்டாவது ஹேமகர்ப்ப போடலீரஸத்தை (சார்ங்கதர முறை) தேவதார் வாத்யரிஷ்டத்துடன் உட்கொள்ளச் செய்யலாம். ப-ர்.

### சிறு குழந்தைகளுக்கு ஏற்ற விரேசநௌஷதம்.

வைத்திய கலாநிதி பத்திராதிபர் அவர்களுக்கு:—

அன்பார்ந்த ஐயா,

(1) நான் தங்களுடைய வைத்திய கலாநிதியை ஆறு வருஷகாலமாய் தவறாமல் படித்து வருகின்றேன். இதில் வெளியாகிற ஒவ்வொரு வியாஸமும், மற்ற விஷயக் குறிப்புகளும், அரிய ஔஷத முறைகளின் விவரணங்களும் சாஸ்திர ரீதியாகவும், முற்றிலும் தத்துவார்த்தங்கள் அடங்கியவையாகவும், வைத்தியர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் ஒருங்கே உபயோககரமானவையாகவும் இருக்கின்றன. அதிலும் கடிதங்கள் என்கிற தலையங்கத்தின் கீழ் தாங்கள் பிரசுரித்து வரும் விஷயங்களோ மிகவும் அருமையாகவும், அதிக பிரயோஜன கரமாகவும் இருப்பதைக் கண்டு இதைப் படிப்பவர் அனைவரும் என்னைப்போலவே ஸந்தோஷத்துடன் தங்களிடம் நன்றி பாராட்டக் கடமைப்படிருக்கிறார்கள். நான் எனது நன்றியை இக்கடித மூலமாய் தங்களுக்கு அறிவிப்பதோடு, இக்கடிதத்தைப் பிரசுரிப்பதற்கு வைத்திய கலாநிதியில் சிறிது இடம் தரவேண்டுமாகவும் கேட்டுக் கொள்கிறேன்.

(2) இக்கடிதத்தின் அநுபந்தமாக நான் ஒரு சிறிய ஸந்தேஹத்தைக் குறிப்பிட்டு, அவ்விஷயத்தையும், அதற்குள்ள பதிலையும் மேன்மை பொருந்திய கலாநிதியின் வாயிலாகப் பிரசுரிக்கவும் கோருகிறேன். சிறு குழந்தைகளுக்கு ஸாதாரணமாய் அனைவரும் விரேசநத்திற்கு ஆமணக்கெண்ணையையே கொடுத்து வருகிறார்கள். எல்லாக் குழந்தைகளுக்குமே (அவற்றின் வயது, மற்ற நிலைமை முதலியதிலுள்ள பேதா பேதங்களைக் கவனியாது) ஆமணக்கெண்ணெய் ஏற்ற விரேசந மருந்துதானா? அப்படியில்லையேல் விரேசநத்திற்காகக் குழந்தைகளுக்கு அனுகூலமான ஔஷதம் வேறு ஏதாவது கொடுக்கலாமா?

நே. வி. ஸ்வாமிநாத வைத்தியர்.

விடை:—(1) தாங்கள் அன்பார்ந்து வைத்திய கலாநிதியின் உபயோகங்களைப் பற்றி சிலாகித்து எழுதியதற்கு மிகவும் வந்தனம். (2) சிறு குழந்தைகளுக்கு ஸாதாரண நிலைமைகளில் ஆமணக்கெண்ணெய் நல்ல விரேசனௌஷதந்தான். ஆனால் மலச்சிக்கலுள்ள குழந்தைகளுக்கு (அவ்விதமான பெரியவர்களுக்குக்கூட) ஆமணக்கெண்ணெய் விரேசனத்திற்கு உபயோகமானதென்று சொல்ல முடியாது. ஏனெனில் விரேசநமான பிறகு குடலில் மலபந்தத்திற்கான தன்மையையே அது விருத்தி செய்கிறது. நிலாவாரையைக் கஷாயமிட்டு, அதில் சர்க்கரை சேர்த்து இரஸக்கிரியையாகப் பக்குவம் செய்து, தகுந்த அளவில் மலபந்தமுள்ள குழந்தைக்கு விரேசநத்தின் பொருட்டு அதை உபயோகித்து வருவது உத்தமம். சுத்தி செய்த இரஸ கர்ப்பூரத்தை அரை குன்றுமணி யெடையில் ஆமணக்கெண்ணெயில் கலந்து உபயோகிப்பதும் மலபந்தமுள்ள வயது சென்ற குழந்தைகளுக்கு அனுகூலம் தரும். முதிர்ந்த குழந்தைகளுக்கு சிறிது மிளகு இரஸத்தில் நிலாவாரைக் கஷாயத்தையும் கூட்டி மலபந்த நிவாரணத்திற்காகக் கொடுப்பதிலும் நல்ல பலனுண்டு.—ப-ர்.

---

## DRUGS AND THERAPEUTICS.

## ஔஷதங்களும் சிகித்ஸையும்.

### தக்காளியும் மதுமேஹமும்.

ஒரு 19-வயது வாலிபன் மதுமேஹத்தினால் பீடிக்கப்பட, அவனுக்கு டாக்டர் பி. மேதா என்பவர் சிகித்ஸை செய்து வந்தார். ஏதேதோ அரிசி முதலியதைத் தள்ளி பலமான பத்தியங்கள் வைத்தும், கொடியா முதலிய சரக்குகளைக் கொடுத்தும் குறிப்பிடக்கூடிய குணம் ஒன்றும் ஏற்படவில்லை. அந்த நோயாளி நாளுக்கு நாள் மிகவும் இளைத்துப்போய், இனி வியாதி தீருவது கடினம் என்று தீர்மானிக்கும்படியான நிலைமைக்கு வந்து விட்டான். ஒரு கவிராஜ் (ஆயுர்வேத சிகித்ஸகர்) சில நாட்களுக்கு முன்பு இப்பிணியாளியைப் பார்த்து பரிசோதித்ததில், சாகாஹாரங்களைப் போதியவளவு புஜித்தல் நலமென்றும், இறைச்சியை அடியோடு விலக்கவேண்டுமென்றும் சொன்னதோடு, தக்காளிக்காயை தாராளமாய் சாப்பிட்டு வரும்படியும் கூறினதாக இப்பிணியாளி டாக்டர் மேதாவினிடம் சொன்னான். நோயாளிக்கு வேறு சிகித்ஸை எதுவும் பயன்படாமற்போகவே, கவிராஜர் உபதேசித்த சிகித்ஸா முறையை நிறைவேற்றலாமென்று இந்த டாக்டருக்கும் தோன்றிற்று. தினந்தோறும் கோதுமை யன்னத்தோடு பலவிதமான சாகங்களையும் (கத்திரி, முள்ளங்கி, வண்டை, முருங்கை, கோவை அவரை



சேம்பு முதலியன) உபயோகிக்கச் செய்ததோடு, தக்காளிக்காயை தினத்திற்கு மூன்றுமுறையாகப் பச்சையாகவும், சமைத்தும் புஜிக்கச் செய்தார். இவ்விதம் நாற்பதுநாள் உபயோகித்துவந்த பிறகு இப்பிணியாளியின் தேஹம் வலுத்துத் தேறி வந்தது. அதன் பிறகு நீரைப் பரிசோதித்துப் பார்த்ததில் சர்க்கரை வெகு சொற்பமே காணப்பட்டது. அப்பால் தக்காளியை தினத்திற்கு மூன்று முறைக்குப் பதிலாக இரண்டு முறை உபயோகிக்கச் செய்து, மீண்டும் இருபது நாட்கள் கழித்து நீரைப் பரிசோதித்ததில் மதுமேஹக்குறியே அதில் தோன்றவில்லை. அதற்கு முன்பு அவனுக்கு தேஹத்திலிருந்த ரூக்ஷத்தன்மையும், மிகுதியான நாவறட்சியும் நிவ்ருத்தியாய் விட்டன. ஆகவே அவன் சுகமாய் விட்டான். இங்ஙனம் "பிராக்டிகல் மெடிஸின்" என்கிற வைத்தியப் பத்திரிகை கூறுகிறது.

---

### அதிஸாரத்தில் குழந்தைகளுக்கு ஏற்ற குளிகை.

| | | |
|---|---|---|
| கோரைக்கிழங்கு | 2 | தோலா |
| வெட்பாலரிசி | 3 | ,, |
| ஜாதிக்காய் | 2 | ,, |
| கர்ப்பூரம் | 1 | ,, |
| சுத்தி செய்த லிங்கம் | ½ | ,, |

கோரைக் கிழங்கு முதலிய முதல் மூன்று சரக்குகளையும் நன்கு சூர்ணம் செய்து, வஸ்திரகாளிதம் செய்தெடுத்து, பிறகு மற்ற இரண்டு சரக்குகளையும் அவற்றோடு கூட்டி, ஓமக் கஷாயத்தினால் ஒரு யாமம் அரைத்து, அப்பால் குடசப்பாலை வேரின் கஷாயத்தினாலும் ஆட்டியெடுத்து, பயறுப் பிரமாணமான மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும்.

இந்த குளிகையைத் தேனில் குழைத்து இரண்டு மணிக்கு ஒரு தடவையாகக் குழந்தைகளுக்கு அதிஸாரத்தில் கொடுக்கலாம். வறுத்த அரிசிமாவின் கஞ்சியைப் பத்தியமாகக் கொடுக்கலாம். வாலிபருக்கும், வயது சென்றவருக்கும் அதிஸாரத்தில் 3-முதல் 6-மாத்திரை வரையில் உபயோகிக்கலாம்.

### ஜலம் அஜீர்ணௌஷதம்.

அஜீர்ணத்தினால் வருந்துபவர், இரவிற் படுக்கைக்குப் போகையில் ஒரு கோப்பை குளிர்ந்த ஜலத்தையும், பகற் போஜனத்திற்கு முன்பு ஒரு கோப்பை வெந்நீரையும் பருகவும். இதனால் அஜீர்ண நோயில் ஆச்சரியமான குணத்தைக் காணலாம். இங்ஙனம் டாக்டர் ஹென்ரி ராபர்ட்ஸன் என்பவர் அபிப்பிராயப்படுகிறார்.

---

### தேனுக்கு பல்யகுணம்.

இந்தியாவில் ஆயுர்வேத-யூனானி வைத்தியர்கள் தேனை லேஹ்ய பாகங்களிலும், அநுபான முறைகளிலும் மிகுதியாக உபயோகிக்கிறார்கள். ஆனால் அதைத் தனியாக ஔஷதமென்கிற முறையில் உபயோகிப்பது அரிது. நியூயார்க்கிலுள்ள டாக்டர் லீ என்கிற சாஸ்திரஞ்ஞர் தேனை ஒரு சிறந்த பல்ய (tonic) ஔஷதமாக உபயோகித்து விசேஷ பலன் கண்டதாக அதைப் புகழ்ந்து கூறுகிறார். தேஹத்திற்குப் புஷ்டியுண்டாக்கும் தன்மை இதற்கு மிகுதியாய் உண்டு. உடம்பில் தசைநார்கள் பருக்கவேண்டி விரும்புபவர் தேனை கால் அவுன்ஸ் முதல் ஒரு அவுன்ஸ் வரையில் தினத்திற்கு இரண்டு மூன்று வேளை உபயோகிக்கலாம்:—Practical Medicine.

---

### சந்தக எண்ணெயும் கீல்வாயுவும்.

மிஸ்டர் சே. இராமஸ்வாமி வைத்தியர் என்பவர் பின் வருமாறு கூறுகிறார்:—கந்தகம் கலந்த எண்ணெய் ஆமவாதத்தில் (ஸாதாரணமாயிருந்தாலும் வெகு நீடித்ததாயிருந்தாலும்) அதிக அநுகூலமுண்டு பண்ணுகிறது. மிக்க கடுமையான நிலைமையில் இந்த எண்ணெயை உட்கொள்ளவும், மேலுக்குப் பூசவும் வேண்டும். ஒரு டிராம் அளவுள்ள நல்லெண்ணெய்க்கு ஒரு கிரைன் கந்தகம் வீதம் சேர்ந்திருக்கவேண்டும். சுத்தமான கந்தகத்தை எண்ணெயில் சேர்த்துக் காய்ச்சி, ஒன்றோடொன்று கலக்கும்படியாகக் குழப்பி, குப்பியில் எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும். பிணியாளியின் வயதுக்குத் தகுந்தவாறு இரண்டு முதல் ஐந்து தேக்கரண்டி வரையில் உபயோகிக்கலாம்.

---

## NOTES AND ITEMS OF INTEREST.

## பலவகைக் குறிப்புகள்.

### ஆயுர்வேத ஔஷதபரிசீலனை.

சென்னை சட்ட ஸபையில், ஆயுர்வேத ஔஷத பரிசீலனை விஷயமாக ஸமீபத்தில் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டு, அது ஒருவாறு ஸபையோரால் ஆமோதிக்கப்பட்டு நிறைவேறியுள்ளது. ஆயுர்வேத ஔஷதாதிகளை ஆராய்ச்சி செய்து, அவற்றின் உபயோகங்களைத் தெரிந்து கொள்ளவும், ஆயுர்வேத முறையை அதன் மூலமாய் ஆதரிக்கவும் உத்தேசித்து இத்தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இதற்காக ஒரு கமிட்டியும் நியமிக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலமாய் ஏற்படப் போகிற பலன் எப்படி யிருக்கப் போகிறதென்று நாம் முன்னதாகவே ஊஹித்துக் கூற வஷயங்கள் இல்லாமற் போகவில்லை. டாக்டர்

கோமானை சுதேச ஔஷத பரிசீலனைக்காக நியமித்த போதே நாம் "எவ்விதமான முடிவு ஏற்படுமென்று நினைத்தோமோ அங்ஙனமே இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. சுதேச வைத்திய முறைகளிலுள்ள முக்கியமான சிறந்த அம்சங்களைத் தெரிந்து மேனாட்டு வைத்திய முறையோடு சேர்த்துக் கொண்டு ஆங்கில வைத்தியத்தை விருத்தி செய்யவும், சுதேசவைத்தியத் தொழிலை இன்னும் சில படிகள் தாழ்த்துவதற்குமே இந்த முயற்சிகளெல்லாம் இராஜாங்கத்தாரால் சாதுர்யமாம் கையாளப்படுகின்றன வென்பது நமது கொள்கை.

## நிகில பாரத ஆயுர்வேத மஹாஸம்மேளநம்.

நாளது ஏப்ரல் மாஸம் 6, 7, 8 இத்தேதிகளில் பம்பாயில் புலேச்வா என்கிற விடத்தில் எல்லா இந்திய ஆயுர்வேத மஹாமண்டலத்தின் பன்னிரண்டாவது ஸம்மேளநம் நடைபெறப் போகிறது. ஸம்மேளநத்தில் ஆயுர்வேத வித்வான்களால் முக்கியமான அநேகம் சாஸ்த்ரீய உபந்யாஸங்களும், பலவித வியாதிகளுக்கு நிதாந விசேஷங்களோடு அததற்கு ஏற்ற சிகித்ஸா க்ரமங்களும் அநுபவ பூர்வகமாய் விவரித்து அறிவிக்கப்படுமென்றும், இச்சம்மேளநத்துடன் பிரபலமான வைத்தியப் பொருட்காட்சி யேற்படுத்தப்படுமென்றும், பலவிதமான அபூர்வ ஔஷதபாக முறைகளும் அனைவருக்கும் முன்பாகத் தயார் செய்து காட்டப்படுமென்றும், ஆயுர்வேதாபி வ்ருத்தியில் சிரத்தையுள்ள அனைவரும் அதற்கு விஜயம் செய்து அவரவருக்கு உசிதமான உதவியும் செய்து இம்மஹாஸம்மேளநத்தை இனிது நடைபெறச் செய்யவேண்டுமென்றும் வரவேற்புச் சங்கத் தலைவரான டாக்டர் போபட் பிரபுராம் வைத்திய, எல். எம். எஸ். அவர்கள் நமக்கு அறிவிக்கின்றார். இச்சம்மேளநத்திற்குப் போக வேண்டியவர்கள் செலுத்த வேண்டிய கட்டணங்கள் பின் வருமாறு ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடுகிறார்கள் :—வரவேற்புச் சங்கத்தில் அங்கத்தினராகச் சேர ரூ 25. ஸம்மேளந நடவடிக்கைகளைப் பார்க்கப் போவோர் ரூ 21. ஆங்காங்கிருந்து வரும் பிரதிநிதிகள் ரூ 15. யோக்கியதை பெற்ற வைத்தியர்கள் ரூ 10.

## அதிஸாரத்திற்குப் பரிஹாரம்.

அதிஸாரத்தைப் பரிஹரிப்பதற்கு நோயாளியை முதலில் அமைதியாகப் படுக்கச் செய்யவும். குறைந்தது பன்னிரண்டு மணிநேரமாவது உணவு கொடுக்காமலிருப்பது நலம். குடலில் தேஹத்திற்கு உதவாத வஸ்து (அல்லது தோஷம்) ஏதாவது சேர்ந்திருக்கக் கூடுமாகையால், அதை வெளிப்படுத்திக் குடலைச்சுத்தம் செய்வதற்காக ஆமணக்கெண்ணெயைச் சிறிது உட்கொள்ளச் செய்யவும். ஆமணக்கெண்ணெய் கொடுத்த பிறகு—சில விரேசனங்கள் ஆன பின்பு—அதையடுத்து சிறிது மலபந்தம் ஏற்படுவது வழக்கம். மலபந்தத்திற்கு ஆமணக்கெண்ணெயைக் கொடுப்பது உசிதமல்லவென்று சொல்லுவதற்குஇது ஒரு காரணம். அதிஸாரம் கடுமையாக பலப்பட்டு வரும்போது—அதிலும் விசேஷமாய் சிறுவர்களுக்கு-அச்சமயம் ஜலத்தைத் தவிர வேறு எதையும் உள்ளுக்குக் கொடுக்காமலிருப்பது தான் விவேகமுள்ள சிகித்ஸையாகும். சிறிது ஸௌக்கிய நிலைமை யேற்பட்ட பிறகு அரிசிக்கஞ்சி, நல்ல ரொட்டி, கொடிமுந்திரிகையின் இரஸம் இவற்றைக் கொடுக்கலாம். மலம் திரவமாக வெளியாகக் கூடிய நிலைமை இருப்பதாகத் தோற்றுகிற வரையில் இவ்வுணவுகளை மாத்திரம் மிதமாகக் கொடுத்து வரலாம். இரண்டு நாட்கள் சென்ற பின்பு பாலை மேற்படி உணவுகளோடு கூட்டிக் கொடுப்பது நலம். ஆனால் குழந்தைக்குப் பாலில் வெறுப்புத் தோன்றியிருந்தால் அதை அவ்வுணர்ச்சி இருக்கும் வரையில் உபயோகிக்கலாகாது.-Good Health.

## சூரிய வெளிச்சம் சிறந்த ஔஷதம்.

நல்ல சுகத்திற்கும், உண்மையான பரிசுத்தத்திற்கும், நீடித்த காலம் ஜீவித்திருப்பதற்கும் சூரிய வெளிச்சம் வெகு சிறந்த மருந்து; சுத்திக்கு உத்க்ருஷ்டமான உபகரணம்; எவ்விதத்திலும் நன்மை செய்யக்கூடிய நயமான பதார்த்தம். "எவ்விடத்தில் சூரியரச்மி பிரவேசிக்கவில்லையோ அங்கு வைத்தியன் நுழைவது திண்ணம்" என்று ஸ்பெயின் தேசத்தியவர் ஒரு பழமொழி யுரைப்பதுண்டு. சுகாரோக்கியத்தைப்பற்றி ஓர் உபந்யாஸம் செய்வதானால், அவ்வுபந்யாஸத்தின் ஸாராம்சம் அனைத்தும் இப்பழமொழியில் அடங்கியிருக்கின்றதெனலாம். சூரியவெளிச்சமென்பது ஒரு விச்தௌஷதம். விலையில்லாமல் வேண்டியவளவு அது கிடைக்கிறதென்றாலும், அதை விலையில்லா மாணிக்கமெனக் கூறினும் கூறலாம். சூரிய வெளிச்சம் களிப்பூட்டுகிறது, சுறு சுறுப்பையுண்டாக்குகிறது, ரோகிகளுக்கும் சுகிகளுக்கும் ஒருங்கே ஆயுளை அபிவ்ருத்தி செய்கின்றது. ஒரு வஸ்து ஏதும் விலையில்லாமலே எங்கும் எளிதாகக் கிடைப்பதானால் அதற்கு மதிப்பில்லை யென்றும், தமக்கு மிக்க உபயோகமுள்ளவை யென்று நிரூபிக்கக் கூடிய பொருட்களைப் பணத்தைக் கொண்டு மதிப்பிட்டாலே உயர்ந்ததென்றும் ஜனங்களுக்கு துரத்ருஷ்டத்தினால் ஒரு பிரமை இக்காலத்தில் ஏற்பட்டிருக்கிறது. இங்ஙனம் "வெஸ்ட்ரன் மெடிகல் ரிவ்யூ" என்கிற வைத்தியப்பத்திரிகை கூறுகிறது. நம்மவர் காலை நேரத்தில் ஸ்நாநாதி அநுஷ்டானங்களோடு, தினந்தோறும் சில குறிப்பிட்ட நேரம் வரையில் "சூரிய நமஸ்காரம்" செய்வதை, மேனாட்டு வைத்தியப் பத்திரிகையின் இந்த நாகரிகக் கொள்கையைப் படித்த பிறகாவது கைவிடாமல் அனுஸரித்து நடத்த நமது நேயர்கள் விரும்புவார்களா?

# அஷ்டாங்க ஹ்ருதயத்தின்

## சிகித்ஸா - கல்ப . ஸ்தாநங்களுக்கு

## விஷய அகராதி.

145255


அ

அகத க்ஷாரம் 146.
அகஸ்திய ஹரீதகீ லேஹ்யம் 42, 68.
அக்னி தீபந சூர்ணம் 111.
,, வர்த்தக க்ஷாரங்கள் 115.
,, விஸர்ப்ப சிகித்ஸை 173.
அசோக க்ருதம் 191.
,, பீஜாதி க்ருதம் 31.
அச்ச ஸுரை 73.
அச்மரியில் உபயோகிக்கத்தகும் க்ஷார - க்ஷீர - பானுதிகள் 121.
,, சஸ்திர சிகித்ஸை செய்யு முறை 123.
,, சஸ்திரப் பிரயோகமான பிறகு செய்யுமுபசாரங்கள் 124.
அச்மரீ சிகித்ஸை 120.
,, பூர்வ ரூபத்தில் செய்ய வேண்டிய சிகித்ஸைகள் 120.
அச்வகந்த க்ருதம் 55.
அஞ்ஜலி 234, 235.
அதிக உமிழ்நீரூற்றைக் குறைக்கும் முறைகள் 59.
அதிவிரேகாதிகளால் மூர்ச்சித்தவனுக்குச் செய்யுமுபசாரம் 219.
அதிஸார சிகித்ஸாத்தியாயம் 98.
அதிஸாரத்தில் பொதுவாக லங்கநம் செய்வது அவசியம் 98.
,, மலப் போக்கைத் தடுக்கக்கூடாத நிலைமைகள் 98.
,, வமநம் செய்விக்கும் நிலைமை 98.
,, ஹரீதகியைப் பிரயோகிக்கும் நிலைமை 99.
அதிஸாரம் முதலிய குடலைப்பற்றிய கோளாறு நிவாரணமாவதன் குறிகள் 109.
அநுலோமநம் 68, 140.
அநுவாஸநத்திற்கேற்ற அர்சோரோகிகள் 90.
அநுவாஸநம் ஆமாவ்ருதமானால் செய்யும் பரிஹார முறை, 230.
,, கபாவ்ருதமானால் செய்யும் பரிஹார முறை, 230.
,, பித்தாவ்ருதமானால் செய்யும் பரிஹார முறை, 229.
,, மலாவ்ருதமானால் செய்யும் பரிஹார முறை 230.
,, வாதாவ்ருதமானால் செய்யும் பரிஹாரமுறை 229.
,, வெளிவராமல் வர்த்வாங்கங்களை வியாபிப்பதும் அதற்குப் பரிஹாரங்களும் 230.
அநுவாஸந வஸ்தி, 16.
அநுவாஸந வியாபத் வித்திகள் 229.
அந்தந்த ருதுவுக்கேற்ற த்ரிவ்ருத் சூர்ணகல்பங்கள் 212.
அந்தர் வித்ரதி 131.
,, வித்ரதிக்கு சிகித்ஸை 132.
அந்த்ர வ்ருத்தி சிகித்ஸை 135.
அபக்வமான அந்தர் வித்ரதியில் கஷாயம் 131.
அபக்வ வித்ரதிகளில் கல்க-க்ருத-நிரூஹ-அநுவாஸநப் பிரயோகங்கள் 131.
அபக்வ ஸ்நேஹவஸ்தியால் உண்டாகும் தீங்குகளும் பரிஹாரமும் 230.
அபதர்ப்பண சிகித்ஸை 49.
அபதாநக சிகித்ஸை 190.
அபதாநகத்தில் சிரோவிரேசநம் 191.
அபதாநகம் 190.
அபபாஹுக சிகித்ஸை 192.
அபயா க்ருதம் 115.
அபயா ரிஷ்டம் 88.
அபராஜித கலம் 101.
அபராஜிதாதி தூபங்கள் முதலியன 22.
அபிஷ்யந்தம் 222.
அபிஷ்யந்தி 202.
அமிதமான கபம் முதலியது ஸ்ரவிப்பதற்கு ஏற்ற பரிஹாரம் 95.
அம்பஷ்டாதி கணம் 105.
அம்ருதப்ராசம் 39.
அம்ருதாதி குக்குலு 170.
அம்ல க்ருதம் 103, 109.
அம்லத்ரவ்ய வர்க்கம் 18.
அம்லம் 5.
அயஸ் க்ருதி 128.
அயோகம் 217.
அருவருப்பான வஸ்துவாலுண்டான சர்திக்கு பரிஹாரம் 64.
அரோசகத்திற்கு விசேஷ சிகித்ஸை 58
அரோசகஹரமான கல்கம் 17.
அர்சஸ் சிகித்ஸாத்தியாயம் 83.
அர்சஸ் நன்கு சுட்டு விலக்கப்பட்டதன் குறிகள் 84.
,, நிவாரணமாதல் 90.
,, முதலியதில் ஜாட்ராக்னியைப் பாதுகாப்பதன் பிரதானம் 98.
,, முதலியவற்றிற்குக் காஞ்ஜசுக்தம் 96.
அர்சஸ்வில் அநுவாஸநத்திற்கேற்ற பிப்பல்யாதி தைலம் 91.
,, அபயாரிஷ்டம் 88.
,, அம்ல-பித்தங்கள் அதிகரித்து ஜாடராக்னியும் குன்றிப்போனால் செய்யும் பரிஹாரம் 94.

அர்சஸ்ஸில் இரத்தத்தை ஸ்ரவிக்கச்செய்தல் 85.
,, இரத்தப் பெருக்காலான வாத கோபத்தைத் தணிப்பது 94.
,, உண்டாகும் வலி முதலியதைத் தணிக்கு முபாயம் 95.
,, உபயோகிக்கக்கூடிய க்ருத முறைகள் 89.
,, சஸ்திர சிகித்ஸை செய்யும் வகை 83.
,, தக்ரப் பிரயோகங்கள் 85.
தக்ரார்ரிஷ்டம் 86.
,, தந்த்யரிஷ்டம் 89.
,, பஞ்சமூல ஷீரூஹம் 91.
,, பாடா பிரயோகம் 88.
,, பிப்பலீ வர்த்தமாநகம் 88.
,, பேயா முதலிய முறைகள் 87.
,, பொதுவாக உபயோகிக்கக்கூடியதும் கூடாததும் 98.
,, மலங் கழியச்செய்யும் சில முறைகள் 88.
,, மல சோதநத்திற்கேற்ற துராலபாரிஷ்டம் 89.
,, லேபநங்கள் 85.
,, வர்த்திப்பிரயோகம் 84.
,, ஹரீதகீ பிரயோகம் 88.
அர்சஸ்ஸை அநுஸரிக்கும் மலபந்தத்திற்குப் பரிஹாரங்கள் 87.
அர்சோ யந்திரம் 83.
அர்புத சிகித்ஸை 192.
அர்த்த சராவம் 30, 234.
அர்மணம் 235.
அலாபு கடிகை 196.
அவகாஹம் 119.
அவசியம் ஸ்வேத சிகித்ஸை செய்யவேண்டிய நிலைமை 49.
அவலேஹநம் 41.
அவல்குஜபீஜாதி லேபங்கள் 185.
அற்ப தோஷமுள்ள அதிஸாரத்தில் லங்கநமும் பிறகு அன்னபான கிரமமும் 99.
அஜகந்தாதி சூர்ணம் 211.
அஷ்ட சூர்ணம் 139.
அஷ்டமிகை 235.
அஷ்டாங்க லவணம் 75
அஸநாதிகணம் 128.
அஸாத்தியமான இரத்த - பித்தம் 24.
அஸ்த்திமஜ்ஜாக்களைப்பற்றிய வாதத்திற்கு சிகித்ஸை 189.
அக்ஷம் 234, 235.

ஆ

ஆகந்துகம் 131.
ஆகந்து ஜ்வரம் 4.
ஆசயங்கள் 112.
ஆடகம், 31, 114, 234, 235.
ஆட்ய வாதம் 201.
ஆதபஜ த்ருஷ்ணை சிகித்ஸை 70.
ஆநூபமாம்ஸம் 170.
ஆநூபவஸாதி அநுவாஸநம் 225.
ஆந்தரிகேக்ஷாதகம் 69.
ஆமதோஷ சிகித்ஸை 49.
ஆமதோஷத்துடன் கூடிய ஜ்வரம் 5.
ஆமதோஷம் 49, 105, 110.
,, நீங்கிய கிரஹணீரோகிக்குச் செய்யும் பரிஹாரங்கள் 112.
,, வயிற்றுக் கடுப்புகளுடன் கூடிய அதிஸாரத்திற்கேற்ற சிகித்ஸைகள் 100.
ஆமபாகம் 234.
ஆமலகாதி க்ருதம் 142.
ஆமஜ்வரத்தில் ஔஷத முபயோகிக்கக்கூடாது 4.
,, தோஷஹர ஔஷதமுபயோகிக்கக்கூடாது 15.
ஆமாசயத்தில் வாயு பிரகோபிப்பதாலுண்டாகும் ஹ்ருதய சூலைக்கு சிகித்ஸை 68.
ஆமாசயத்தைப்பற்றிய வாதத்திற்கு சிகித்ஸை 189.
ஆமாசயம் விம்முவது 68
ஆம்ரம் 235
ஆயுஷ்ய க்ருதம் 40.
ஆயுஷ்யம் 42.
ஆரக்வதாதி கணம் 10.
,, க்வாதம் 10.
ஆரக்வதாரிஷ்டம் 213.
ஆரநாளாதி தைலம் 198.
ஆர்த்தகம் 200.
ஆர்த்ரகாதி க்ருதம் 167.
ஆர்த்ர காஸம் 37.
ஆர்த்ரார்சஸ் 83.
ஆவர்த்தகீ க்ருதம் 176.
ஆஸவம் 77.

இ

இமய-விந்திய மலைகளைச் சார்ந்த ஔஷதிகளின் குண பேதங்கள் 234.
இயற்கை நிலைமையைப் பெற்றவனுடைய இலக்ஷணம் 231.
இயற்கையிலேயே ஜாடராக்னி-ஜீர்ண கோசங்களுக்கு விரோதமான வஸ்துக்கள் 118.
இரக்த குல்ம சிகித்ஸை 148.
இரக்த குல்மத்தில் உதிரம் அதிகமாக ஸ்ரவிக்கையில் செய்யுமுபசாரம் 149
,, சஸ்திர சிகித்ஸை 148.
,, யோநி விரேசநம் 148.
,, ஸ்ரவிக்கும் உதிரத்தைத் தடுக்கக்கூடாது 149.
இரக்தத்தைப்பற்றிய வாதத்திற்கு சிகித்ஸை 189.
இரக்த-பித்தத்தில் அநேக வகையான ஔஷதாதி முறைகள் 27.
,, ஆடாதோடையின் விசேஷ உபயோகம் 27.
,, இரத்தத்தை அடக்குவது முதலியது 25.
,, உபயோகிக்கத் தகுந்த யவாகூ மாம்ஸரஸங்கள் 26.
,, சில பொது சிகித்ஸைகள் 29.
,, சில மாம்ஸங்களையுபயோகிக்கும் நிலைமைகள் 27.
,, தர்ப்பணமும் பேயாவும் 25.
,, த்ரிவ்ருதாதி யோதகம் 25.
,, நஸ்யமுறை 29.
,, நிதாநவர்ஜநம் 27.
,, பலவிதமான க்ஷீரயோகங்கள் 28.
,, மந்தபேயாதி பிரயோகங்கள் 26.
,, வஸ்தி முறை 29.
இரக்த-பித்தத்திற்கேற்ற க்ருத பாகங்கள் 29.
,, தானியமும் சாகமும் 27.
,, பானவகைகள் 27.
இரக்த-பித்தத்தைத் தடுக்க த்ரிவ்ருத் அவலேஹம் 25.
இரக்த மோக்ஷண முறை 20.
இரக்தம் கலந்த அதிஸாரத்திற்கான சிகித்ஸை 104.
இரக்த-வித்ரதி-ஆகந்து வித்ரதிகளுக்கு சிகித்ஸை 131.
இரக்தஜ கிருமிகளுக்கு சிகித்ஸை 187.
இரக்த-விஷஜசோபைகளில் சிகித்ஸை 170.
இரக்தாதி ஸாரத்திற்கேற்ற சில முறைகள் 107.
இரக்தாதி ஸாரமும் அதன் சிகித்ஸையும் 106.
இரக்தார்சஸ் சிகித்ஸை 91.
இரக்தார்சஸ்ஸில் அநுவாஸநவஸ்திக்கு ஸ்நேஹம் 91.
,, இரக்த-மோக்ஷண- லங்கந-பாசந - ஸ்தம்பநாதி சிகித்ஸைகள் 92.
,, பத்தியமான உணவு முதலியவை 93.
,, பலவித கல்கங்கள் 93.
,, ,, க்ருத பானங்கள் 93.
,, பிச்சா வஸ்தி 94.
,, வாத-கபங்களின் அநுபந்தமும் அதன் சிகித்ஸையும் 91.
,, ஸ்நிக்த்தமும் ஸசோஷ்ணமுமான உபசாரங்களைச் செய்தல் 94.
இரஸ தாது 45.
இரஸாஞ்ஜநம் 27.
இரஸாயநம் 56.
இரஸாயந வஸ்தி 223.
இராசி 234.
இராஜயக்ஷ்ம சிகித்ஸை 53.
இராஜயக்ஷ்மாவில் அசுத்தரத்தத்தை வெளிப்படுத்தல் 60.
,, அச்வகந்த க்ருதம் 55.
,, அப்யங்கத்திற்கான ஔஷதங்கள் 60.
,, அரோசகத்திற்கு விசேஷ சிகித்ஸைகள் 58.
,, உட்கொள்ள வேண்டிய சில க்ருத பாகங்கள் 54.
,, உண்டாகும் அதிஸாரத்திற்கு சிகித்ஸை 60.
,, உத்வர்த்தந சூர்ணமும் ஸ்நாநநீரும் 61.
,, உபயோகிக்கத்தகுந்த பானங்களும் அன்னமும் 54.
இராஜயக்ஷ்மாவில் ஏலாதி க்ருதம் முதலியன 56.
,, கர்ஜூராதி க்ருதம் 55.
,, சிரோவேதனை முதலியதற்கு சிகித்ஸை 59.
,, சிறந்த சிகித்ஸைகளின் ஸங்கிரஹம் 62.
,, சோதநத்திற்குப் பிறகு ஏற்ற உணவு முதலியன 53.
,, பீநஸத்திற்கு விசேஷ சிகித்ஸை 59.
,, மலத்தினாலான பலம் 60.
,, மாம்ஸ க்ருதம் 56.
,, மாம்ஸ போஜனமும் மதுபானமும் 61.
,, முதலில் சோதந சிகித்ஸை 53.
,, ராஸ்நாதி க்ருதம் 55.
,, வமநமுறை 53.
,, வாதாதி தோஷங்களுக்கேற்ற மாம்ஸ போஜனங்கள் 54.
,, விரேசந முறை 53.
,, ஜீவந்த்யாதி க்ருதம் 55.
,, ஸம்ஸர்க்கதோஷ சிகித்ஸை 60.
,, ஸ்வரபங்கத்திற்கு விசேஷ சிகித்ஸைகள் 57.
இராஜ்யக்ஷ்மாவின் ஆறுவித உபத்திரவங்கள் 54
,, விகாரங்களில் வெள்ளாட்டு மாம்ஸரஸம் 54.
இராஜ்யக்ஷ்மியை ஸ்நேஹாதிகளில் மூழ்கச் செய்தல் 61.
இருதயதாப-இரக்த -பித்தங்களில் மதந பலத்தையுபயோகிக்கும்முறை 206.
இருதயத்தைப்பற்றிய வாதத்திற்கு சிகித்ஸை 189.
இருதயரோக சிகித்ஸைகள் 62.
இளைத்துள்ள பிரமேஹிகளுக்கு ஏற்ற ஔஷதாஹாரங்கள் 128.
இன்பமான மதுபான ரஸாநுபவம் 78.
இன்பமேதரும்மதுபான முறை 77
இக்ஷுகண்ட யோகம் 211.

உ

உக்கிரமான ஜ்வரங்களில் மணிமந்திர ஔஷதிகளின் பிரயோகம் 23
உணவின்மையினாலான த்ருஷ்ணைக்கு சிகித்ஸை 70.
உணவு ஜீர்ணமாகையிலும் ஜீர்ணமானபிறகும் அல்லது எப்பொழுதுமேயுள்ள ஹ்ருதய சூலைக்கு சிகித்ஸை 68.
உதகோதர சிகித்ஸை 158.
உதகோதரத்தில் சஸ்திர சிகித்ஸையும் பத்தியமும் 159.
உதகோதரம் 158.
உதர சிகித்ஸாத்தியாயம் 149.
உதரரோகங்களின் பொதுவான தோஷமும் சிகித்ஸையும், 160.
உதரரோகத்தில் அதிரூக்ஷநிலைமையில் ஸ்நேஹாதி சிகித்ஸை, 149.
,, ஆவரண தோஷங்களுக்கு ஆமணக் கெண்ணெய், 153.
,, க்ருதபானத்திற்குப் பிறகு பேயாதிகளின் உபயோகம், 152.
,, நன்கு விரேசநமான பின் வயிற்றை வஸ்திரத்தால் கட்டுதல், 154.
,, பக்கசூலை முதலியவை தோன்றினால் அவற்றிற்கேற்ற க்ருதங்கள், 153.
,, பொதுவான பத்தியாஹாரம், 160.
,, மிச்சமுள்ள தோஷத்தை நிவ்ருத்தி செய்யு முறைகள், 152.
,, மோர் மிகச் சிறந்த வஸ்து, 160.
,, விசேஷசிகித்ஸைகள், 154.
,, விரேகத்தினால் பலஹீனமாயிருக்கையில் க்ஷீர பாகம், 151.
,, விரேசநத்திற்குப் பிறகு வயிற்றுப்பொருமலில் நிரூஹங்கள் 154.
,, விரேசநம் செய்விப்பதின் ஆவச்யகம் 149.
,, ,, பிரயோகிக்கும் நிலைமை 150.
,, ஜாடராக்னி மந்தப்படுதலும் அதற்கு ஹிதமான உணவும் 160.
உதரரோகிகளுக்கு ஆகாதவை 160.

உதரரோகிகளுக்கு ஸகல முறைகளிலும் பால் அனுபானம் 161.
உதராதி ரோகங்களில் சில க்ருதங்கள் 152.
உதர்தம் 4.
உதாவர்த்தத்தில் குதவர்த்திப் பிரயோக முறை முதலியன 95.
உதாவர்த்தர்களில் கல்யாணக க்ஷாரம் 95.
உதும்பரம் 234.
உத்காரிகா பிண்டங்கள் 59.
உத்காரிகை 46.
உத்தாநவாத சோணிதத்திற்கு பாஹ்யோபசாரம் 200.
உத்வர்த்தந சூர்ணமும் ஸ்நாந நீரும் 61.
உத்வர்த்தநம் 61.
உந்மாநம் 234.
உபத்திரவம் 12.
உபநாஹம் 60.
உரக்ஷதத்திற் கேற்ற க்ருதான்ன பேரஜநம் 39.
உரக்ஷதம் நீங்கியதும் தலைவலி முதலியதற்கு கிசித்ஸை 44.
உஷ்ண-சீதங்களால் வருந்துபவருக்கு ஏற்ற வஸ்திகள் 226.

ஊ

ஊருஸ்தம்ப சிகித்ஸை 192.
ஊருஸ்தம்பத்தில் வியாயாமங்கள் 193.
,, ஸ்வேத-ஸேக-லேபங்கள் 193.
ஊர்த்வச்வாஸத்துடன்கூடிய த்ருஷ்ணைக்கு சிகித்ஸை 71.
ஊர்த்வாங்கவாதம் 31.
ஊஷகாதி கணம் 121.

எ

எல்லா குஷ்டத்திலும் முதலிற் செய்யும் சிகித்ஸை 174.
,, மதாத்யயங்களுக்கும் ஏற்ற ஔஷதம் 76.
,, ஜ்வரத்திலும் பித்தத்தின் ஸம்பந்தம் 3.
எவ்விதமான சிவதையைக் கிரஹிக்கலாம் ? 210.

ஏ

ஏகாங்க சோபையில் லேபநங்கள் 169, 170.
ஏரண்ட தைலபாந முறை 140.
ஏரண்ட மூலாதி நிரூஹம் 220.
ஏரண்டாதி கல்கம் 121.
ஏலாதி க்ருதம் 56.
,, சூர்ணம் 58.
ஏழெட்டு நாட்களுக்குப் பிறகும் தொடர்கிற மதாத்யயத்திற்கு சிகித்ஸை 72.
ஏழையான பிரமேஹிகளுக்கேற்ற பரிஹார முறை 128.

ஐ

ஐந்துவிதமான பஞ்சமூலங்கள் 55.

ஒ

ஒவ்வொரு அர்சஸ்ஸுக்கும் சிறந்த முக்கிய ஔஷதங்கள் 98.

ஓ

ஓஜஸ் 1, 76.
ஓஜஸ்யம் 42.
ஓஜஸ்ஸுக்கும் பாலுக்குமுள்ள பொதுவான பத்து குணங்கள் 76.
ஓஜோதாது 1, 76.
ஓஷதி கந்தம் முதலியவற்றாலான ஜ்வரங்கள் 23.
ஓஷதிகந்த விஷப்பற்றுகளாலான ஜ்வரங்களுக்கு சிகித்ஸை 22.

ஔ

ஔத்தர பக்திகம் 60.
ஔஷதங்களுக்கு உபயோகமான சிறந்த மூலிகைகள் 232.
ஔஷத பாநம் செய்தவன் வேகஸ்ரோதாதிகள் செய்வதாலாகும் தீங்குகளும் பரிஹாரமும் 218.
ஔஷத முறைகளில் திரவமோ அளவு முதலியவையோ குறிப்பிடாவிடில் செய்ய வேண்டிய வகை 235.
ஔஷதம் என்பதற்குப் பர்யாய சொற்கள் 204.

க

கடம் 234, 235.
கடம்பின் இனங்கள் 44.
கடயந்திரம் 144.
கடுகா கஷாயம் 9.
